வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு வாரமலர்

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 17.03.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 77 பக்கங்கள் : 16



08 ஜனாதிபதி தேர்தலை எதிர்நோக்குவதில் அரசியல் கட்சிகளின் தடுமாற்றம்!



09 பொதுவேட்பாளர் பெறும் வாக்குகள் தமிழர் தீர்வை சர்வதேசத்துக்கு புலப்படுத்தும்!



10 இந்திரா காந்திக்கும் மோடிக்கும் உள்ள ஒற்றுமை என்ன?



11 ராஜபக்ஷக்களைப் ரணில் பாதுகாக்கிறாரா? அல்லது தன்னைப் பாதுகாக்கிறாரா?

### வெடுக்குநாறிமலை விவகாரம்:

# ஜனாதிபதியை சந்திக்க தமிழ்க் கட்சிகள் முடிவு!

## நாளை கொழும்பில் முக்கிய பேச்சு



யாழ்ப்பாணம், மார்ச் 17

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை உடனடியாக சந்தித்து, வெடுக்குநாறிமலையில் கைதுசெய்யப்பட்ட 8 தமிழர்களை உடனடியாகப் பிணையில் விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதென தமிழ்க் கட்சிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் கூடி தீர்மானித்துள்ளன. 15




# வெடுக்குநாறிமலை கைதுக்கு எதிராக வவுனியாவில் வெடித்தது போராட்டம்!

### ஆயிரக்கணக்கானோர் பேரணியில் பங்கேற்பு

வவுனியா, மார்ச் 17

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் விடுவிக்கக் கோரியும், பொலிஸாரின் அராஜகத்தை கண்டித்தும் வவுனியாவில் நேற்றுப் பெரும் 15





## நல்லூரிலிருந்து வாகனப் பேரணி

யாழ்ப்பாணம், மார்ச் 17

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று வழிபாடுகளில் ஈடுபட்ட ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரி யாழ்ப்பாணம், நல்லூரில் இருந்து வவுனியா நோக்கி நேற்று வாகனப் பேரணி இடம்பெற்றது.

வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்ட 8 பேரையும் விடுதலை செய்யுமாறு கோரி தொடர்ச்சியாக பல்வேறு போராட்டங்கள் 15

## வவுனியா சிறையில் 5 பேரின் உண்ணாவிரதம் இடைநிறுத்தம்!

### மதகுருமார், அரசியல் பிரதிநிதிகள் வழங்கிய உறுதிமொழியை அடுத்து

வவுனியா, மார்ச் 17

வவுனியா சிறைச்சாலையில் தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்த 5 பேரின் போராட்டம் நேற்று இடைநிறுத்தப்பட்டது.

வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி தினத்தன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் 15

## பொலிஸாரிடம் தமிழ்மொழியில் முறையிட அவசர தொலைபேசி!

### யாழ்ப்பாணத்திலும் அறிமுக நிகழ்வு

வவுனியா, மார்ச் 17

தமிழ்மொழி மூல முறைப்பாட்டுக்கு அவசர தொலைபேசி இலக்கமான 107 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களை மையமாகக் கொண்டு, ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் 15

### இந்துக்களின் போர்:

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இன்னிங்ஸ் வெற்றி பெற்றது!




யாழ்ப்பாணம், மார்ச் 17

கொழும்பு இந்துக் கல்லூரியை இன்னிங்ஸ் மற்றும் 100 ஓட்டங்களால் வெற்றி பெற்றது யாழ். இந்துக் கல்லூரி.

இந்துக்களின் போர் என்று வர்ணிக்கப்படும் கொழும்பு இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணிகளின் பெருந்துடுப்பாட்ட போட்டி நேற்று முன்தினம் யாழ். இந்து கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப் 15

## எமது ஆட்சியில் தமிழ் மக்களின் இனப் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு

### தமிழ் அரசியல்வாதிகளுடன் பேச தயார் கிளிநொச்சியில் அநுரகுமார அறிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 17

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வு வழங்கப்படுமென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் 15



## கோட்டாபயவை மகிந்த முன்னிலையில் சாடினார் முருத்தெட்டுவே ஆனந்த தேரர்

கொழும்பு, மார்ச் 17

பௌத்த மதகுரு ஒருவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் மற்றுமொரு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கடுமையாக சாடியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் உரையாற்றிய முருத்தெட்டுவே ஆனந்த 15



## இப்படியும் நடக்கிறது

சில தினங்களுக்கு முன்னர் தெற்கில் பெருமளவில் முன்னெடுக்கப்படும் இந்திய எதிர்ப்பு பிரசாரம் குறித்து எழுதியிருந்தேன்.

நேற்று முன்தினம் தெற்கு முழுவதும் ஒரே வகையான சுவரொட்டிகள் இரவோடு இரவாக ஒட்டப்பட்டிருந்தனவாம். பல லட்சம் சுவரொட்டிகளை அச்சிட்டு, அதேவேளை ஒரே இரவில் தெற்கு முழுவதும் ஒட்டுவதெனில் அது ஒரு பாரிய நிறுவனமயப்படுத்தப்பட்ட பிரசாரம் என்பதைப் புரிந்துகொள்ளலாம். இந்தப் பிரசாரங்களின் பின்னணியில் சீனாவின் கரங்கள் இருக்கலாம் என்று நம்பப்படுகின்ற அதே வேளை, அதற்கு தெற்கில் மக்கள் எதிர்ப்பு காரணமாக அதல பாதாளத்திற்கு சென்று விட்ட ஒரு கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலரும் இருப்பதாக பரவலாக பேசப்படுகின்றது என்கிறார் தெற்கில் விசயம் அறிந்த நண்பர் ஒருவர்.

தெற்கில் சிங்கள மக்களை இந்தியாவுக்கு எதிராக கிளர்ந்து எழச் செய்ய சிலர் முயன்று வரும் அதேவேளையில்தான், வடக்கிலும் இந்தியாவுக்கு எதிரான மனநிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு சிலர் முயன்று கொண்டிருக்கின்றனர்.

எதற்கெடுத்தாலும், அது இந்தியாவின் பின்னணியில் நடப்பதாக கட்டுகதைகளை பரப்புவதையே பிரதான தொழிலாக கொண்டு செயல்படுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படவேண்டும் என்று சொன்னாலும் அதன் பின்னால் இந்தியா இருக்கின்றது என்கின்றனர். இவை எல்லாம் தமிழ் மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பு உணர்வை விதைப்பதற்கான முயற்சியே என்பதை புரிந்து கொள்ள ஆறு அறிவு தேவையில்லை.

சில தினங்களுக்கு முன்னர் இந்தப் பத்தியில் தமிழ் அரசு கட்சியின் பிரித்தானிய மன்றம் என்ற பெயரில் சிலர் கூட்டம் ஒன்றை நடத்தியது தொடர்பாகவும் அதில் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டமை தொடர்பாகவும் எழுதியிருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அப்படி யாருக்குமே புலம்பெயர் நாடுகளில் கிளைகளை அமைப்பதற்கு அனுமதி கொடுக்கவில்லை என்று கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சத்தியலிங்கம் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அத்தோடு அவர் தனது பணி முடிந்துவிட்டது என்று இனி ஒதுங்கிக்கொள்வாரோ தெரியவில்லை.

ஏற்கனவே தமிழ் அரசு கட்சிக்கு பிரித்தானியாவில் கிளை ஒன்று இயங்கி வருகின்றது. அதன் செயல்பாட்டாளர்கள் சிலர் கட்சிக்காக தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

அதேபோல கனடாவிலும் கட்சிக்கு ஒரு கிளை உண்டு. அந்தக் கிளையும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. அதிகம் ஏன், அந்தக் கிளையில் தீவிர செயல்பாட்டாளராக இருந்தவர்தான் திருகோணமலை குகதாசன். அவரே திருகோணமலையில் கடைசியாக நடைபெற்ற செயல்குழுக் கூட்டத்தில் பொதுச்செயலாளராக தெரிவானவர். அவரது தெரிவே கட்சிக்குள் கடைசியாக பூகம்பம் ஏற்படக் காரணமாக இருந்தது.

அதைவிட கனடா கிளையே தமிழ் அரசு கட்சியின் தாயக செயல்பாடுகளுக்கு அதிக நிதி உதவியை செய்துவருவதாகவும் கூறப்படுவதுண்டு. இந்த நிலையிலேயே புலம்பெயர் நாடு எதிலும் கட்சிக் கிளைகள் அமைப்பதற்கு யாருக்கும் தாம் அனுமதி கொடுக்கவில்லை என்று பதில் செயலாளர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அந்த அறிக்கையில் அவர் எந்த இடத்திலும், பிரித்தானியாவில் ஏற்கனவே தமக்கு ஒரு கிளை இருப்பது பற்றியோ அல்லது கனடாவில் இருப்பது பற்றியோ குறிப்பிடவில்லை.

பிரித்தானியாவில் அண்மையில், இலங்கை தமிழ் அரசு பிரித்தானிய மன்றம் என்ற பெயரில் அமைக்கப்பட்ட கட்சி, பிரித்தானியாவில் வர்த்தக நிறுவனங்களை பதிவுசெய்யும் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது. அதாவது ஒரு வர்த்தக நிறுவனம்போல பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது.

அது அவர்களுக்கு வர்த்தக நோக்கமாகவே இருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் அந்த கூட்டத்திலும், அது தொடர்பான விளம்பரங்களிலும் தமிழ் அரசு கட்சியின் உத்தியோகபூர்வ இலச்சினையையும் சின்னத்தையுமே பயன்படுத்தியிருந்தனர்.

உண்மையாகவே அப்படி தமிழ் அரசு கட்சி யாருக்கும் கிளை அமைப்பதற்கோ அல்லது, மன்றம் அமைப்பதற்கோ அனுமதி கொடுக்கவில்லை என்றால், தமது உத்தியோகபூர்வ சின்னத்தைப் பயன்படுத்துவதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க முடியும் என்கிறார் பிரித்தானிய சட்டம் தெரிந்த ஒருவர். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால், இதுபோன்று இனி எல்லோருமே புலம்பெயர் நாடுகள் தோறும் கட்சிக் கிளைகளை அமைக்கத் தொடங்கி விடுவார்கள்.

தமிழ் அரசு கட்சிக்குத்தான் சட்டநவடிக்கை எடுப்பதில் அனுபவம் இல்லையா என்ன?.

**- ஊர்க்குருவி.**

## 'இந்துக்களின் போர்' இறுதிநாள் பதிவுகள்




இந்துக்களின் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - கொழும்பு இந்துக் கல்லூரி அணிகளின் பெருந்துடுப்பாட்ட போட்டியின் இறுதிநாள் மற்றும் பரிசளிப்பு நிகழ்வின் போது... (படங்கள் : ஐ.சிவசாந்தன்)

# பசுமை அமைதி விருதுகள் விழா இன்று வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 17

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் 2023ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகளை வழங்கும் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கடந்த ஆண்டு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சூழல் பொதுஅறிவுப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்கள் சூழலியல் ஆசான் க.சி. குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகளும், 2023ஆம் ஆண்டின் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளர் தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும், இவ்விழாவில் 2023ஆம் ஆண்டில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மாணாக்க உழவர் மதிப்பளிப்பும், தாவரங்களை அடையாளம் காணும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தாவராவதானி மதிப்பளிப்பும் இடம்பெறவுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் எம். எஸ். ஏ. கலீஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

இலங்கையில் சுற்றுச்சூழல் சார்ந்து வழங்கப்பட்டு வரும் விருதுகளில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் முன்னிலை விருதுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மன்னார் தீவுப் பகுதியில் அதிக அளவில் தென்னையை தாக்கும் 'வெண் ஈ' நோய்

## கட்டுப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை

மன்னார், மார்ச் 17

**வடக்கு மாகாணத்தில் தென்னை மரங்களில் ஏற்பட்டுள்ள 'வெண் ஈ' நோய் தாக்கம் மன்னார் மாவட்டத்திலும் குறிப்பாக மன்னார் தீவுப் பகுதியில் அதிகரித்துக் காணப்படுகிறது.**

குறித்த நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் பயிர் பாதுகாப்பு சேவை நிலைய அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை மன்னாருக்கு சென்று குறித்த நோய்த் தாக்கம் தொடர்பாக தெளிவுபடுத்தி கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை முன்னடுத்தனர்.

மன்னார் மாவட்ட செயலகத்தின் வளாகத்திலும் நோய் தாக்கத்துக்கு உள்ளான தென்னை மரங்களில் நோய் தாக்கத்தை கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகள் விடப்பட்டன.

மேலும் மன்னார் நகரப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட கிராமங்களிலும், தலைமன்னார் பகுதியிலும் குறித்த நோயை கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகள் தென்னை மரங்களில் விடப்பட்டுள்ளன.

குறிப்பாக கரையோர பிரதேசப் பகுதிகளில் குறித்த நோயின் தாக்கம் அதிகமாக காணப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த தென்னை மரங்களில் ஏற்படும் நோய் தாக்கம் ஏனைய மரங்களுக்கும் பரவும் வாய்ப்பு காணப்படுவதும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக பயன் தரும் மரங்கள் முற்று முழுதாக தனது பயன் பாட்டை இழக்கும் நிலை காணப்படுகின்றது. (அ)

# ஐ.தே.க. மே தினம் சுதந்திர சதுக்கத்தில்!

கொழும்பு, மார்ச் 17

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கொண்டாட்டத்தை கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



அதிகளவான மக்களுடன் இது மேற்கொள்ளப்படும் என முன்னாள் நிதியமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டத் தலைவருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு ஆதரவாக இந்த பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், மே தினப் பேரணியை மாபெரும் வெற்றியடையச் செய்வதற்கு கட்சியின் அனைத்து அமைப்பாளர்களதும் அதிகபட்ச ஆதரவைப் பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பிரதான கட்சிகளான பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியினரும் இம்முறை பிரம்மாண்டமான மேதின நிகழ்வை நடத்த தயாராகி வருவதாகவும் கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# இலங்கை விமானப்படை தலைமையக கட்டடம் பொலிஸாரிடம் கையளிப்பு

கொழும்பு, மார்ச் 17

இலங்கை விமானப்படையின் தலைமையகமாக பயன்படுத்தப்பட்ட கட்டடம் உத்தியோகபூர்வமாக பொலிஸாரிடம் நேற்று முன் தினம் கையளிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

சுமார் இரண்டு தசாப்தங்களாக இலங்கை விமானப்படையின் தலைமையகமாக பயன்படுத்தப்பட்டு வந்த 12 மாடிகளைக் கொண்ட கட்டடம் 3 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளதுடன், எதிர் காலத்தில் பொலிஸ் தலைமையகமாக செயற்படவுள்ளது.

உத்தியோகபூர்வமாக கையளித்தல், ஏற்றுக்கொள்ளல் தொடர்பான ஆவணங்களில் விமானப்படை பணிப்பாளர் ஜெனரல் எயார் மார்ஷல் மனோஜ் கப்பெட்டிபொல, பொலிஸ் தலைமையக நிர்வாகப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கலாம் திலகரத்ன உள்ளிட்டோர் கையொப்பமிட்டனர்.

பின்னர் விமானப்படைத் தளபதி, பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு இடையில் உரிய ஆவணங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், விமானப்படை, பொலிஸ் உயர் அதிகாரிகள் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# பொருள் விலை குறைக்கப்பட்டாலும் நன்மை நுகர்வோருக்கு கிட்டவில்லை

## அசேல சம்பத் சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 17

பொருட்களின் விலை குறைக்கப்பட்டாலும் அதன் நன்மை நுகர்வோருக்குச் சென்றடைவதில்லை. இதனை சரி செய்வதற்கான எந்த வேலைத்திட்டமும் நுகர்வோர் அதிகார சபையிடம் இல்லை. அத்துடன் நுகர்வோர் அதிகார சபைக்கு பணிப்பாளர், தலைவர் ஒருவர் இல்லாமலே உலக நுகர்வோர் உரிமைகள் தினத்தை நாங்கள் கொண்டாடி வருவதையிட்டு வெட்கப்படவேண்டும் என தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டொலரின் பெறுமதி அதிகரித்திருந்தபோது பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டது. தற்போது டொலரின் பெறுமதி குறைந்து வருகின்ற போதும் பொருட்களின் விலை அவ்வாறே இருந்து வருகிறது. என்றாலும் இது தொடர்பாக தேடிப்பார்த்து நுகர்வோருக்கு நிவாரணம் வழங்க எமது நுகர்வோர் அதிகார சபைக்கு முடியாமல் போயிருக்கிறது.

கடந்த காலங்களில் மரக்கறி விலை பாரியளவில் அதிகரிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது மரக்கறி விலை பாரியளவில் குறைந்துள்ளது. ஆனால் கிராமங்களில் மரக்கறி விலை இன்னும் அதிகமாகவே இருக்கிறது. அதேபோன்று சந்தைக்கு சந்தை விலைகளில் மாற்றம் காணப்படுகிறது. இது எவ்வாறு நடக்க முடியும். இதனை முறைப்படுத்த நுகர்வோர் அதிகார சபையிடம் எந்த வேலைத்திட்டமும் இல்லை. அதனால் கறுப்புக்கடை வியாபாரிகள் பாரியளவில் இலாப மீட்டி வருகின்றனர். சாதாரண நுகர்வோருக்கு எந்த நன்மையும் கிடைப்பதில்லை.

அத்துடன் முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். ஆனால் கடைகளில் முட்டை ஒவ்வொரு விலைக்கு விற்கப்படுகிறது. பொருட்களின் விலை குறைக்கப்பட்டாலும் அதன் நன்மை நுகர்வோருக்குச் செல்வதில்லை. இடைத்தரகர்களே பாரியளவில் இலாபமீட்டி வருகின்றனர். இதனை தடுப்பதற்கு நுகர்வோர் அதிகார சபையால் முடியாமல் இருக்கிறது-என்றார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவது குறித்தே ரணில் - பஸில் பேசியிருப்பர்!

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 17

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றுள்ளது. எவ்வாறு ஜனாதிபதித் தேர்தலை காலம் தாழ்த்தி, பொதுத் தேர்தலை முன்னரே நடத்தலாம் என்பது தொடர்பில் இவர்கள் திட்டமிட்டிருக்கக் கூடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு திரும்பியுள்ள பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தை எவ்வாறு தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது என்பது தொடர்பிலேயே இவர்கள் பேசியுள்ளனர்.

மக்களே தவறிழைத்தனர் என்றும், அதற்கு அவர்களே பொறுப்பு கூற வேண்டும் என்றும் பஸில் ராஜபக்ஷ தொடர்ந்தும் கூறிவந்தார். எதிர்காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவும் இதனையே கூறுவார். தற்போது பாராளுமன்றத் தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும் என்று பஸில் தெரிவித்துள்ளார். ஆனால் அரசியலமைப்பின்படி ஜனாதிபதித் தேர்தலே முதலில் இடம்பெற வேண்டும்.

எவ்வாறிருப்பினும் எந்த தேர்தலுக்கும் ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே உள்ளது. பொதுஜன பெரமுனவும், ஐ.தே.க.வும் இணைந்தால் மாத்திரமே அவர்களால் பாராளுமன்றத்தில் ஓரளவேனும் ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். முன்னர் மறைமுகமாக செய்தவற்றை இன்று பகிரங்கமாக செய்கின்றனர்.

பாராளுமன்றத்தில் 134 பேர் வாக்களித்து ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கினர். ஆனால் இன்று அவர்கள் இந்த அரசாங்கம் எம்முடையதல்ல என்கின்றனர். ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கிவிட்டு அவர்களால் இவ்வாறு பொறுப்புக்கூறலிலிருந்து விலக முடியாது.

மக்கள் ஆணைக்கு முக்கியத்துவமளிக்க வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது. எனவே செலவுகளைக் குறைப்பதற்காக ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆகிய இரண்டையும் ஒரே தினத்தில் நடத்தினால் கூட அதற்கு எவரும் எதிர்ப்பு தெரிவிக்கப் போவதில்லை - என்றார். (அ)

# மலர்ச்சாலை உரிமையாளரின் மனைவியின் மீது வாள்வெட்டு!

கிளிநொச்சி, மார்ச் 17

கிளிநொச்சியில் இனந்தெரியாத நபர்களினால் மலர்ச்சாலை ஒன்றின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் மலர்ச்சாலையின் உரிமையாளரது மனைவியும் வாளால் வெட்டப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள மலர்ச்சாலை நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டதுடன், மலர்ச்சாலையின் உரிமையாளரின் மனைவியும் வாள்களினால் வெட்டப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# கிணற்றில் வீழ்ந்து 6 வயது சிறுமி பலி!

கொழும்பு, மார்ச் 17

புத்தளம் - மதுரங்குளி பகுதியில் சிறுமி ஒருவர் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் காலை தனது வீட்டுக்கு அருகில் உள்ள கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சென்றபோது குறித்த சிறுமி கிணற்றில் வீழ்ந்துள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் மதுரங்குளி பகுதியை சேர்ந்த 06 வயதுடைய சிறுமியே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மதுரங்குளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)




# வடமராட்சி கிழக்கு கடலில் கரையொதுங்கிய மிதவை!

வடமராட்சி, மார்ச் 17

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் கடற்பகுதியில் அந்தியேட்டிக்கிரியை நிறைவேற்றப் பட்ட மிதவை ஒன்று நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளது.

'பரமேஸ்வரி....என்னை நிம்மதியாக போக விடுங்கள் சகோதரர்களே' என்ற வாசகம் அதில் எழுதப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபரின் இறுதிச் சடங்குக்காக இது வடிவமைக் கப்பட்டு கடலில் விடப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

குறித்த மிதவையை அதிகள வான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (அ-2)

# 15 வீதமான வாக்குகளே ஜே.வி.பிக்கு கிடைக்கும்

## எஸ்.பி. திஸாநாயக்க கணிப்பு



கொழும்பு, மார்ச் 17

**"ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளுக்கிடையில் கடும் போட்டி நிலவக்கூடும்."- என்று நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள் ளார்.**

இவ்விரு கட்சிகளும் வாக்கா ளர்கள் அளிக்கும் 78 சதவீத வாக்குகளால் இந்த போட்டி நிலவ வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நுவரெலியா மாவட்ட அபி விருத்தி குழு கூட்டத்தில் பின் னர் இடம்பெற்ற ஊடக சந்திப் பின் போது ஊடகவியலாளர் கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே பாராளு மன்ற உறுப்பினர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஜனாதிபதி தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி 15 சதவீத வாக்குகளை பெற்றுக் கொள்ளும்.

அதேநேரத்தில் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் சுதந்திர கட்சி ஆகியவை 05 சதவீத வாக்குகளையே பெறும்.

அதேபோன்று புதிதாக கள மிறங்கும் கட்சி மற்றும் எம்மி டமிருந்து பிறிந்து சென்றவர்க ளின் கட்சி ஆகியவை 02 சதவீத வாக்குகளை பெற்றுக்கொள்வார் கள்." - எனவும் எஸ்.பி. திஸா நாயக்க சுட்டிக்காட்டினார். (அ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்து பலத்தை காட்டுவோம்!

## பொதுஜன பெரமுன சூளுரை

கொழும்பு, மார்ச் 17

சபாநாயகருக்கு எதிரான நம் பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்து ஆளுங்கட்சியின் பலத்தை வெளிப்படுத்து வோம் - என்று பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

இது தேவையற்றதொரு பிரே ரணையாகும். நம்பிக்கையில் லாப் பிரேரணையை நாம் நிரா கரிக்கின்றோம். சபாநாயகரை நாம் பாதுகாப்போம். பிரே ரணையை தோற்கடிக்க நட வடிக்கை எடுப்போம்.

கூட்டத்துக்கு சபாநாயகர் தலைமை தாங்கினாலும் அவர் அநீதியான முறையில் செயற்பட வில்லை. விவாதத்துக்கு இரு நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, எந்த பூ மலர்ந் தாலும் மொட்டு இருந்தால் தான் பூ மலரும் என்பதை கூறி வைக்க விரும்புகின்றேன்-என் றார். (அ)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய ஐஸ்கிறீம் விற்பனைக் கடைக்கு 42,000 ரூபா தண்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 17

சங்கானை சுகாதார வைத் திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் பகுதியில், பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இடம்பெற்ற வேளை, சுழிபுரம் பொது சுகாதாரப் பரிசோதக ரின் வழமையான பரிசோதனை யில், ஐஸ்கிறீம் விற்பனை சுகா தார சீர்கேட்டுடன் நடைபெற் றமை அவதானிக்கப்பட்டது.

இதனையடுத்து ஐஸ்கிறீம் விற்பனை செய்த கடை உரிமை யாளருக்கு எதிராக 07 குற்றச் சாட்டுகளுடன் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் சுழிபுரம் பொது சுகாதார பரிசோதகரால் வழக்கு தாக்கல் செய்யப் பட்டது.

அன்றைய தினமே வழக்கை விசாரித்த நீதவான், எதிராளி குற்றங்களை ஏற்று கொண்ட தையடுத்து 42,000 ரூபா தண் டம் அறவிட்டதுடன் கடுமை யான எச்சரிக்கையும் விடுத் தார். (அ)

# 2002 கிராம அலுவலர்களுக்கு ஏப்ரல் இறுதிக்குள் நியமனம்

கொழும்பு, மார்ச் 17

வெற்றிடமாகவுள்ள 2002 கிராமிய சேவைப் பகுதிகளுக்கான கிராம சேவை உத்தியோகத்தர் களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப்பரீட் சைகள் இந்த நாட்களில் நடைபெற்று வருவதாக வும், ஏப்ரல் மாத இறுதிக்குள் அவர்கள் பணிய மர்த்தப்படுவார்கள் எனவும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித் தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத் திட்டம் இன்னும் இரண்டு வருடங்கள் அல்லது அதற்கு மேல் முன்னோக்கிச் சென்றால், வீழ்ச்சிய டைந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் சிறந்த நாட்டை உருவாக்க முடியும் என் றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே உள்நாட்டலு வல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளை முடிவுக்குக் கொண்டுவந்து தற்போது பொருளா தார மற்றும் சமூக ஸ்திரத்தன்மை உருவாக்கப்பட் டுள்ளது. அதற்கு எமது அமைச்சும் நிறைய பங்களித்துள்ளது.

மாவட்ட அளவில் உணவுப் பாதுகாப்பு மற் றும் போசாக்குக் குழுக்களை உருவாக்க நாங்கள் உழைத்தோம். வறுமையில் வாடும் 20 இலட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும வழங்கத் தேவை யான பங்களிப்புச் செய்யப்பட்டது. தற்போது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத் தின் மூலம் கிராமப்புற வளர்ச்சிக்கு புத்துயிர் அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

மேலும், வெற்றிடமாகவுள்ள 2002 கிராம சேவைப் பிரிவுகளுக்கு கிராம சேவை உத்தியோ கத்தர்களைப் பணியமர்த்த கடந்த 13 ஆம் திகதி முதல் நேர்முகத் தேர்வு நடைபெற்றது. இதன் மூலம் அவசியமான கிராம சேவை உத்தியோகத் தர்களை வரும் ஏப்ரல் மாத இறுதிக்குள் நியமிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அத்துடன், கிராம சேவை உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் பிரதி யமைச்சர் தினேஷ் குணவர்தன உத்தியோகத்தர்க ளின் தொழில்சார் சங்கங்களுடன் கலந்துரையா டினார். அங்கு பயணச் செலவுகள் உட்பட பல் வேறு பிரச்னைகள் தொடர்பில் அவர்களின் முன்மொழிவை முன்வைத்தனர். அது குறித்த அமைச்சரவைப் பத்திரத்தை ஏற்கனவே நாம் சமர்ப்பித்துள்ளோம்.

அத்துடன் கிராம சேவை உத்தியோகத்தர்க ளின் பிரதான பிரச்னையான கிராம அதிகாரிகள் யாப்பு உருவாக்கப்பட்டு அமைச்சரவை பத்திரத் தின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது. (அ)

# மொட்டுக் கட்சி வேட்பாளர் யாரென்று விரைவில் முடிவு!

## மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 17

எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தலில் பொதுஜன முன்னணி யின் வேட்பாளர் யார் என்பது விரைவில் தீர்மானிக்கப்படும் என முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் பொதுஜன முன்னணியின் வேட்பாளர் யார் என்பது உறுதிபட அறி விக்கப்படும் என அவர் குறிப் பிட்டார்.

கட்சியின் வேட்பாளர் யார் என்பதனை தீர்மானிக்கும் நோக்கில் கட்சியின் தலைவர்க ளுடன் விரைவில் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என வும் அவர் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர் தொடர்பில் பலரும் பல்வேறு கருத்துக்க ளையும் விமர்சனங்களையும் வெளியிட்டு வருகின்றபோதி லும் கட்சியின் இறுதித் தீர்மா னம் அதிகாரபூர்வமாக எடுக் கப்படவில்லை எனவும் மகிந்த ராஜபக்ச கூறினார்.

இந்தநிலையில், ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கட்சி யின் முக்கியத் தலைவர்களுக் குள் இரகசிய சந்திப்புகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# முன்னிலை சோஷலிசக் கட்சியுடன் ஜே.வி.பி. இணைவது சாத்தியப்படாது

## கூறுகின்றார் விஜித ஹேரத் எம்.பி.

கொழும்பு, மார்ச் 17

ஜே.வி.பி. மற்றும் முன்னிலை சோஷலிசக் கட்சி என்பவற்றின் சங்கமம் சாத்தியப்படாதொன் றாகும் என்று தேசிய மக்கள் சக்தி யின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

துரோகிகளுடன் இணைந்து செயற்பட தயாரில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜே.பி.வி. மற்றும் முன் னிலை சோஷலிசக் கட்சி என்ப வற்றின் இணைவுக்கான சாத் தியம் பற்றி எழுப்பப்பட்ட கேள் விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறி யுள்ளார்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் விபசாரம் சட் டப்பூர்வமாக்கப்படும் எனக் கூறப்படுவது பொய்யாகும். அவ்வாறு செய்யப்படமாட் டாது எனவும் அவர் குறிப்பிட் டார். (அ)

# ஒன்லைன் ஆசன முன்பதிவில் சிக்கல்

கொழும்பு, மார்ச் 17

தொலைதூர ரயில்களில் ஆசன முன்பதிவு செய்ய புதி தாக அறிமுகப்படுத்தப்பட் டுள்ள இணையவழி முறை சிக் கலை ஏற்படுத்துவதாக ரயில் பயணிகள் குற்றம் சாட்டியுள்ள னர்.

இதனால் கோட்டை ரயில் நிலையத்திற்கு வந்த பயணிகள் பலர் நேற்று அசௌகரியங்க ளுக்கு உள்ளாகினர்.

சாதாரண பயணிகள் மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கான ரிக்கெட் முன்பதிவு செயல் முறையை டிஜிற்றல் மயமாக் கும் நடவடிக்கையாக இலங்கை ரயில்வே சமீபத்தில் முதல் இணையவழி ரிக்கெட் மற்றும் இணையவழி ரயில் ஆசன முன்பதிவு முறையை அறிமுகப் படுத்தியது.

அதன்படி, இணையவழி முறையில் ஆசன முன்பதிவு செய்த பயணிகளுக்கு ரிக்கெட் ஒதுக்கப்பட்டாலும், ஆசன முன்பதிவு செய்ய ரயில் நிலை யத்திற்கு வந்த பின், சில பய ணிகளுக்கு ஆசன ஒதுக்கீடு செய்யப்படவில்லை என தக வல் வெளியாகியுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
17.03.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# வெடுக்குநாறி

வெடுக்குநாறி மலை சிவன் ஆலய விவகாரம் தமிழ் சூழலின் அரசியலை சூடாக்கியிருக்கின்றது. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ் தேசிய மக்கள் முன்னணி) வெடுக்கு நாறி விவகாரத்தை முன்வைத்து, அதன் எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்துவருகின்றது. ஏனைய கட்சிகளோ, ஆலய விவகாரத்தில் கைதுசெய்யப்பட்டவர்களின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளதாக தெரிவித்திருக்கின்றன. இவ்வாறான நிலைமை தொடர்ந்தால் நாங்கள் ஒன்றிணைந்து ஒரு தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்தி, எங்கள் எதிர்ப்பை தெரிவிக்கும் நிர்ப்பந்தம் உருவாகுமென்று, ஜனாதிபதியிடம் வலியுறுத்தும் துணிவு தமிழ் கட்சிகளின் தலைவர்களுக்கு இருந்தால் அது வரவேற்கத்தக்கது - ஆனால், நமது தமிழ் கட்சிகளின் தலைவர்களிடம் இதனை எதிர்பார்கலாமா?

ஆனால், இதற்கு முன்னரும், இந்து ஆலயங்கள் தொடர்பிலும், புத்த விகாரைகள் தொடர்பிலும் சில சர்ச்சைகள் எழுந்திருந்தன. அவற்றை முன்னிறுத்தியும் ஆர்ப்பாட்டங்களும், எதிர்ப்பு ஊர்வலங்களும் இடம்பெற்றிருந்தன. அந்த பிரச்னைகள் தீர்ந்துவிட்டனவா அல்லது ஒவ்வொரு புதிய பிரச்னை வருகின்ற போதும், முன்னைய பிரச்னைகள் கைவிடப்படுகின்றனவா? குருந்தூர் மலை பிரச்னைக்கு என்ன நடந்தது? மயிலிட்டி பிரச்னைக்கு என்ன நடந்தது? இவைகள் தொடர்பில் எல்லாம் ஏராளம் பேசப்பட்டது. முன்னணி எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக பிரசாரம் செய்யப்பட்டது. ஆனால், அனைத்தும் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு பின்னர் கைவிடப்பட்டுவிட்டது. திருகோணமலை கன்னியா வெந்நீருற்று விவகாரத்திலும் எதிர்ப்புகள் காண்பிக்கப்பட்டன - விடப்போவதில்லை என்று வீரவசனங்கள் பேசப்பட்டன - ஆனால், இறுதியில் இருந்ததும் இல்லாமல் போன கதையானது. ஒரு சிறிய நிலத்துண்டு மட்டுமே, கன்னியா வெந்நீர் ஊற்றில் இந்துக்கள் வசமிருக்கின்றது.

இப்போது வெடுக்குநாறி விவகாரத்தை முன்வைத்து, கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்படும் வரையில் போராட்டங்கள் தொடருமென்று சத்தம் போடப்படுகின்றது. பிறிதொரு பிரச்னை வருகின்ற போது, வெடுக்குநாறியும் காலப்போக்கில் காணாமால் போய்விடும். கடந்த பதின்நான்கு வருடங்களாக, தமிழர்களின் எதிர்ப்பு அரசியல் இந்த அடிப்படையில்தான் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் இவ்வாறான எதிர்ப்பினால் எதனையாவது தடுத்து நிறுத்த முடிந்ததா என்றால் - பதில் பூச்சியம்.

இந்த விடயத்தை ஓர் இலங்கை தழுவிய இந்துக்களின் பிரச்னையாக கையாளுமாறு நாம் தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றோம். முதலில், வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். முஸ்லிம் அரசியல்வாதிகள் அண்மையில் ஜனாதிபதியை சந்தித்து, முஸ்லிம் சமூகத்தின் பிரச்னைகள் தொடர்பில் பேசியிருந்தனர் ஆனால், அவர்கள் அனைத்து முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகளாக இருந்தனர். முஸ்லிம்களின் பிரச்னை என்று வருகின்ற போது, கட்சிகளை கடந்து சிந்திக்கின்றனர். அவ்வாறான அணுகுமுறையே தமிழ் மக்களுக்கும் தேவை.

இதனை வெறும் தமிழ் தேசிய எல்லைக்குள் மட்டும் சுருக்கக் கூடாது. - ஏனெனில் நாமோ, தமிழ் தேசியம் மதம் கடந்தது என்று விளக்கமளிப்பவர்கள். எனவே மதம் சார்ந்த ஒரு பிரச்னையை கையாளுகின்ற போது, எதற்காக நாம் தமிழ் தேசிய போர்வையை போர்த்திக் கொள்ள முயற்சிக்கின்றோம். இந்து மக்களின் பிரச்னை தொடர்பில் பேசுகின்றவர்கள், மதத் தலைவர்கள், ஆதீனங்கள் டக்ளஸ் தேவானந்தா தொடக்கம் சிவநேசதுரை சந்திரகாந்தன் வரையில் அணுக வேண்டும். இந்தப் பிரச்னையில் அவர்களது ஆதவை கோர வேண்டும். ஏனெனில் இது அனைவருக்குமான பிரச்னை. இதற்குமப்பால், மலையக தலைவர்களது ஆதரவை கோர வேண்டும். இதனை தேசியரீதியிலான மத சுதந்திரம் தொடர்பான பிரச்னையாக மாற்ற வேண்டும். அப்போதுதான், பௌத்த மதபீடங்களும் இந்த விடயத்தில் சாதகமாக சிந்திக்கும் நிலைக்கு வரும்.

# பொலிஸ் உயர் அதிகாரிகள் பலருக்கு உடன் இடமாற்றம்

*கொழும்பு, மார்ச்*

*சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் உட்பட 18 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர்.*

*இந்த இடமாற்றங்கள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு அமைய பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்புரையின் கீழ் வழங்கப் பட்டுள்ளன.*

*அதன்படிஇ 08 சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள், ஒரு பிரதி பொலிஸ் மா அதிபர், 08 சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகர்கள் மற்றும் ஒரு பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.*

*மேலும் கல்கிசை பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இ.எம். எம்.எஸ். தெகிதெனிய குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.*

*இந்நிலையில் தற்போதைய குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.ஜி. ஏ.கே. பியசேகர களுத்துறை பிரிவுக்கு பொறுப்பான அதி காரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.*

*(அ)*





# அவுஸ்திரேலியா - இலங்கை மாணவர் கல்வி நிதிய உதவி பெற்றனர் கிழக்கு - மலையக மாணவர்கள்

*யாழ்ப்பாணம், மார்ச் 17*

*அவுஸ்திரேலியாவிலிருந்து கடந்த 36 வருடங்களாக இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் நிதி அனுசரணையில் மட்டக்களப்பு -அம்பாறை மாவட்டங்களிலும் மலையகத்தில் நுவடிரலியா மாவட்டத்திலும் வதியும் ஆதரவற்ற மாணவர்களுக்கான நிதி உதவி வழங்கல் நிகழ்வு அண்மையில் பாண்டிருப்பிலும் நானுஓயாவிலும் நடைபெற்றது.*

*கல்வி நிதியத்தின் கிழக்கு மாகாண தொடர்பாளர் அமைப்பான ஆதரவற்ற மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவர் முன்னாள் அதிபர் ந. கமலநாதன் தலைமையில் பாண்டிருப்பிலும், மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் அதிபர் அரியமுத்து தலைமையில் நானு ஓயாவிலும் நடைபெற்றது.*

*இலங்கையில் வாழ்க்கைச்செலவு அதிகரித்திருப்பதை கல்வி நிதியம் கவனத்தில் கொண்டிருப்பதனால் இவ் வாண்டு முதல் மாணவர்களுக்கான நிதிக் கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.*

*தந்தைமாரை இழந்து வறுமைக் கோட்டின் கீழ் வதியும் தமிழ் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, மாதாந்தம் நான்காயிரம் ரூபா வீதம் முதல் காலாண்டுக்கான நிதிக்கொடுப்பனவு தற்போது வழங்கப்பட்டது.*

*இந்நிதி உதவியானது கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம், உள்நாட்டுப்போர் மற்றும் காரணங்களால் தந்தையை இழந்து ஆதரவற்ற நிலையில் தமது பாடசாலைக் கல்வியை தொடர சிரமப்படுகின்ற மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு தமது பாடசாலைக் கல்வியை பூரணப்படுத்தும் வரை ( தரம்- 1 முதல் க. பொ.த உயர்தரம் வரை ) தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.*

*அம்பாறை மாவட்டத்தில் 13 வருடமாக தொடரும் இந்நிகழ்வில் இவ்வாண்டின் முதற் காலாண்டுக்கான நிதி உதவியை பதினேழு பாடசாலை மாணவர்களுடன் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி மாணவியும் பெற்றுக் கொண்டார்.*


*மலையகத்தில் நுவரேலியா மாவட்டத்தில் ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்நிதியுதவியை கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் பெற்றுவருகின்றனர்.*

*அவுஸ்திரேலியாவில் வதியும் தமிழ் அன்பர்களின் ஆதரவுடன் இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியம், வடக்கு, கிழக்கு, மேற்கிலங்கை உட்பட மலையக மாணவர்கள் பலருக்கும் கடந்த 36 வருடங்களாக உதவி வருகின்றது என்பது குறிப்பிடத்தகுந்தது.*

*கடந்த காலங்களில் இந்நிதியத்தின் உதவி பெற்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள், பல்கலைக்கழக கல்வி உட்பட உயர் கல்வியை தொடர்ந்து தொழில் வாய்ப்புகளையும் பெற்றுள்ளனர்.*

*(அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# மௌனமே சிறந்த மொழி

முனைவர் என். பத்ரி

மனிதன் ஒரு சமூக விலங்கு என்று அழைக்கப்படுகின்றான். அவன் அன்றாட வாழ்வில் ஏதோ ஒரு காரணத்திற்காக குடும்ப உறுப்பினர்களுடனும், நண்பர்களுடனும் எதிர்வினையாற்ற வேண்டியுள்ளது.

சில எதிர்வினைகள் சிக்கலை தீர்க்கும் என்று எண்ணுவோம். ஆனால், அவை இருக்கும் சிக்கலை மேலும் பெரியதாக்கி விடும். அவ்வாறான நேரங்களில் மௌனமே சிறந்த எதிர்வினை என்பதை நாம் அனுபவத்தால் உணர்கிறோம்.

வார்த்தைகளால் பேச முடியாத போது மௌனம் பேசுகிறது. மௌனம் நாம் நினைப்பதை விட அதிகம் கூறுகிறது. மௌனம் முட்டாள்களைக் கூட புத்திசாலியாக காட்டும். மௌனம் அழகானது, அமைதியானது. சிந்திக்க நேரம் கொடுத்து, பிரச்னையை அலசி ஆராய வைக்கிறது. நம் தவறுகளை நமக்கு உணர்த்துகிறது.

மௌன மொழி மகத்தான சக்தியை உள்ளடக்கியது. முக்கியமான நபர்களைக் கையாளும்போது அமைதியாக இருக்கக் கற்றுக்கொள்வது நல்லது. அவர்களுடன் வாக்குவாதம் செய்வதை விட, இது அதிக நன்மை பயக்கும். வாயை மூடிக்கொண்டு கேட்பது ஞானத்தின் அடையாளமே. அது பலவீனம் அல்ல, பலமே.

மௌனம் ஒரு சிறந்த ஆசிரியர். அது நமது கண்களை அற்புதமான விஷயங்களைப் பார்ப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துகிறது. மௌனம் நமது படைப்பாற்றலைக் கொண்டு செயல்படவும், நமக்கு இசைவான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொள்ளவும் மிகவும் உதவுகிறது.

மற்றவர்களுடன் தொடர்புகளில் நாம் சிக்கிக் கொள்ளும் போதும், குழப்பத்தில் இருக்கும்போதும் மௌனம் நமக்கு மகத்தான நுண்ணறிவினைத் தருகிறது. நாம் அமைதியாக இருக்கும்போது, சக்திவாய்ந்தவராக உருவெடுக்கிறோம். மக்கள் ஒருபோதும் அமைதியை எதிர்ப்பதில்லை.

மௌனத்தை அனுபவிக்கும் போது, நமது உண்மையான பலத்தையும், பலவீனத்தையும் உணர்கிறோம். புத்திசாலிகள், பேசுவதா அல்லது அமைதியாக இருப்பதா என்பதில் ஐயமிருந்தால், மௌனமாய் இருப்பதையே விரும்புகிறார்கள். மௌனம் உண்மையில் சிறந்த தகவல் தொடர்பு ஆயுதமாகும்.

மௌனம் எந்த ஆளுமையும் நம்மைத் தொந்தரவு செய்ய முடியாத நிலையை ஏற்படுத்துகிறது. மௌனமே துரோகம் செய்யாத நண்பன். அது பலத்தின் ஆதாரம். மௌனமே மகிழ்ச்சியின் சிறந்த திறவுகோல். நாம் மௌனமாக இருந்துவிட்டால், நமக்கு எதிரில் உள்ளவர், நம்மைப் பற்றி, எந்தக் கருத்தும் கூற முடியாதவராகி விடுகிறார்.

நமக்கு நெருக்கமான உறவினர்கள் நம்மைப் பற்றி, தவறான கருத்து கூறும் போது, அதற்கு உரிய விளக்கத்தை தராமல், உடனே அங்கிருந்து எழுந்து மௌனமாக சென்று விடுவது நல்லது.

அப்படி செய்வதால் அந்த சம்பவத்தை நாம் மறந்து விடுகிறோம். ஆனால் அவர் ஏன் இப்படி விலகிச்சென்றார் என்று குழப்பம் அடைகிறார். அடுத்த முறை நம்மைப் பார்க்கும் பொழுது, அவர் நம்மை மரியாதையாக நடத்தக்கூடும்.

மனம் நினைவுகளால் கனத்திருக்கும்போதும், எதிர்பார்த்த ஒருவரை எதிர்பாராத இடத்தில் சந்திக்கும் போதும், பதில் சொல்லமுடியாத நிலையில் நாம் இருக்கும் போதும், வெகுநாட்களாக பேசாத ஒருவர் நம்முடன் பேசும் நிலையிலும், நாம் மனதில் எண்ணியதை விருப்பமான ஒருவரிடம் வெளிப்படுத்த தயங்கும் நிலையிலும், நம் முயற்சியில் வெற்றி பெறும்போதும் மௌனம் நம்மை ஊமையாக்கி அழகுபார்க்கும்.

உறவினர்களிடம் பூசல் வரும் போதும், நம்முடைய மேலதிகாரி நம்மை காரணமே இன்றி சத்தம் போடும் போதும், திடீரென யாரவது சிக்கலான கேள்வி கேட்கும் போதும், எந்த பதிலும் சிக்கலையே ஏற்படுத்தும் என்று உணரும் போதும், உறவுகள் நம்மிடம் கோபத்தை ஏற்படுத்தும் போதும், நமக்கு எந்தவிதத்திலும் தொடர்பில்லாத விவாதம் ஏறபடும் இடங்களிலும் மௌனமே சிறந்த எதிர்வினையாக இருக்க முடியும்.

பல விரும்பத்தகாத பின் விளைவுகளை தவிர்க்க மௌனமே சிறந்த மொழியாக இருக்கிறது. பிற்காலத்தில், அன்று நாம் மௌனம் காத்து இருந்தால், இந்த பிரச்னையை தவிர்த்திருக்கலாம் என நினைப்பதை இதன் மூலம் தவிர்க்க முடியும். நம்மை அலட்சியப் படுத்து பவரை, நமது மௌனத்தால் அலட்சியபடுத்த வேண்டும். நமது மௌனம் ஒருபோதும் சோகம் கலந்த மௌனமாக இருக்க கூடாது. நம்மை அவமதிப்பவரை நாம் ஒரு பொருட்டாகவே நினைக்காத போது, அந்த நபர் மிகவும் வெட்கப்பட்டு போவார்.

நமது கருத்துக்கு மதிப்பில்லாத இடங்களில் மௌனமாக இருத்தல் நலம். தற்புகழ்ச்சி உடையவர்களிடம் அதிகம் உரையாடாமல் மௌனமாக இருத்தல் நல்லது. நாம் தாழ்ந்த நிலையில் இருக்கும் போது மௌனமே சிறந்தது. தன்னைவிட அறிவு மிகுந்தவரிடம் பேசும் போது, அவரது கூற்றை செவிமடுத்து மௌனம் சாதித்தல் நல்லது. நம் முதுகுக்குப் பின்னால் நம்மை விமர்சிப்பவர்களை வெற்றி கொள்ள நாம் மௌனத்தை கடைபிடிப்பது நல்லது.

அதீத சலிப்பு, வெறுப்பு, கோபம், மகிழ்ச்சி ஏற்படும் தருணங்களில் நமக்கு சற்று மௌனம் தேவைப்படும். பிறகு ஆசுவாசப்படுத்தி கொண்டு செயல்படுதல் நல்ல பலன்களைத் தரும்.

நமக்கு எதிராக போலித்தனமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் இடங்களில் சிறு புன்னகை உடன் மௌனமாக கடந்து செல்வது நல்லது. வாக்குவாதம் செய்பவர்களுக்கு நம் மௌனமே மிகச் சிறந்த பதிலாக இருக்கும். எதிரியைக்கூட நண்பனாக்கும் அதிசய ஆயுதம் மௌனமே ஆகும்.

நாம் பேசும் வார்த்தைகள் நமக்கு எஜமானனாகி விடுகின்றன. ஆனால், நாம் பேசும் வார்த்தைகளை விட, நமது வாழ்வில் பல தருணங்களில் சிறந்த மௌனமே எதிர்வினையாக இருக்க முடியும். இதை அனுபவத்தால் மட்டுமே உணரமுடியும். இனியாவது மௌனத்தின் பெருமையை உணர்ந்து வாழ்வில் செயல்படுவோம். மகிழ்வுடன் வாழ்வோம்.

## இந்தவார ராசிபலன் 17.03.2024 - 23.03.2024



ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 27
நல்ல நேரம்: 9.19 - 10.49 ராகு காலம் : 04.49 - 06.19 திதி : சோபகிருது பங்குனி 04



### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் குடும்ப விழாக்கள், சந்தோஷத் தருணங்களாக அமையும். மனைவியுடன் உறவு சீராக, மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். அரசு வகை ஆதாயம் ஏற்படும். வங்கிகள் மூலம் கிடைக்கும் உதவிகளால் புதிதாக தொழில் தொடங்கி ஆதாயம் காணும் நிலை ஏற்படலாம். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் வளர்ச்சி மற்றும் நல்ல முன்னேற்றத்துக்கான காலம் இது. பயண சுகம் ஏற்படும். சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும்.



### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் நெடுநாட்களாக பெண் தேடி அலைந்தவர்களுக்குத் திருமணம் உறுதியாகி, அதன் காரணமாக மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதப்பார்கள். வாலிபர்கள் தோழர், தோழிகளுடன் பார்ட்டிகளுக்கு சென்று மகிழ்வீர்கள். மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்பதற்காகவே, மற்றவர்களின் வேலையையும் தானாக முன்வந்து பொறுப்போடு செய்வார்கள். உண்மை உழைப்பு காரணமாக பணியிடத்தில் உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள்.



### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் நண்பர்களுடன் மால்களுக்கு சென்று, மனமகிழ்ச்சி பெருக, உண்டு மகிழ்ந்து உல்லாசம் அடைவீர்கள். உறவுகளின் இல்ல விருந்து உபசாரங்களில் கலந்து கொள்ளும் போது மனதில் ஒரு திருப்தி ஏற்படும். வீட்டில் திருமணம் போன்ற மகிழ்ச்சி கரமான சுப நிகழ்ச்சிகள் நடைபெற்று சுப விரயங்கள் அதிகரிக்கும். எறும்பு போன்ற உங்கள் வேகமான, சுறுசுறுப்பு மிக்க பணி திறமைகளை வெளிக்காட்டி அதிகாரிகள், அன்பையும், பாராட்டையும் பெறுவீர்கள். எதிர்பார்த்த நபர்களிடமிருந்து, எதிர்பார்த்தபடி தனவரவு தாராளமாக இருக்கும்.



### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உங்கள் வாழ்க்கைப் பாதையில் வசந்த மலர்கள் பூக்க தெய்வ வழிபாடு மற்றும் தெய்வீக கருத்துக்களைக் கேட்பது நல்லது. எதிர்பார்த்த இடத்திலிருந்து பண வரு மானம் தாராளமாக இருக்கும். உற்றார், உறவினர் வருகையால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங் கும். உல்லாசமான பொழுதுபோக்குகள் மூலம் உள்ளம் மகிழும். தாய், மனைவி, தோழி போன்ற பெண்ணினத்தால் இலாபம் ஏற்படும். வீண்பழி, தேவையற்ற விமர்சனங்கள் ஆகியவற்றைத் தவிர்க்க, உறவுகள் மத்தியில் வார்த்தைகளை அளந்து பேசுவது நல்லது.



### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வாக்குவன்மை ஓங்கும். சிலருக்கு வீடு, மனை ஆகியவை கிடைக்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். சிலர் போலி கம்பெனிகள் விளம்பரத்தை நம்பி முதலீடு செய்து, பண விஷயங்களில் ஏமாறலாம். எச்சரிக்கை தேவை. நல்லவர்களுடன் பழகுவது நல்லது. அரசுப் பணியாளர்களுக்கு புதிய அதிகாரமும், பொறுப்பும் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும்.



### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் உடன்பிறப்புகள் மூலம் நன்மைகள் உண்டு. குடும்பத்தில் சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும். திடீர் பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். அதிகாரம் மிக்க தலைமை பதவிகள் தேடிவரும். வீரம் பெருகும். தங்கள் சேவைகள் அங்கீகரிக்கப்பட்டு, புகழும் ஓங்கும். உங்கள் உயர்வைக் கண்டு பிறர் பொறாமை கொள்வர். சிலருக்கு வெப்ப சம்பந்தமான நோய்கள் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து லாபம் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும்.



### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத தன வரவுகள் கைக்கு வந்து சேரும். அதற்குத் தக்க செலவுகளும் கூடும். கேளிக்கை, பிறந்தநாள் விருந்துகள் எனச் செலவுகளோடு, மகிழ்ச்சி பொங்கும் வாரமாக அமையும். அரசு உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு புது பதவிகளும் அதனால் சம்பள உயர்வு ஏற்படும். வியாபாரம் சம்பந்தமான வெளிநாட்டு பயணங்களின் ஆதாயங்கள் ஏற்படும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். பிரபலமானவர்களின் நட்பால் உங்களுக்கு வேண்டியதை சாதித்துக் கொள்வீர்கள்.



### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் எதிர்பாராத பயணங்களால் ஆதாயம் ஏற்படலாம். பழைய கடன்களை அடைக்க புதிய கடன்கள் வாங்க நேரலாம். இடைவிடாத பணி காரணமாக நேரத்திற்கு உணவு உண்ண இயலாமல் போகும். புதிய தொழில் தொடங்க, எதிர்பார்த்தபடி அரசு உதவிகள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். பெரிய மனிதர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் ஆதரவால் நினைத்த காரியங்கள் எளிதில் முடிவடையும். சுறுசுறுப்பற்ற நிலை ஏற்படும்.



### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் செல்வத்திற்கு அதிபதியான அலைமகளே உங்களைப் பார்த்துச் சிரித்தால் நீங்கள் மகிழ மாட்டீர்களா ? தன வருவாய் திருப்திகரமாக இருக்கும். விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரித்து, ஓரளவு இலாபமும் அதிகரிக்கும். அரசு உயர் அதிகாரிகளின் சிபாரிசால் பல நாட்கள் தள்ளிப் போன, அதிகாரம் மிக்க பதவிக்கு பதவி உயர்வு கிடைக்கும். உங்கள் சிறந்த பணிக்காக மேலதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். சிலருக்கு தலைவலி, கண்ணில் பிரச்சனைகள் வந்து சீராகிவிடும். கவலை வேண்டாம்.



### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் திருமண வயது வந்தும், திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கான முயற்சிகள் பெற்றோர்களால் மேற்கொள்ளப்படும். நல்ல விஷயங்களுக்காக அலைச்சல்கள் ஏற்படும். தேவையற்ற நெடுந்தூரப் பயணங்கள் மேற்கொள்ள நேர்ந்தாலும், அதனால் இலாபம் ஏற்படும். அரசு ஊழியர்களுக்கு அவர்கள் இடும் கட்டளைகளை ஏற்று நடக்கும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும்.



### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். தூரப் பயணங்கள் செல்லும் போது எச்சரிக்கை தேவை. அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்னைகளுக்கு ஒரு முடிவு வரும். புதிய தொழில் தொடர்புகள் வணிக நிலை எதிர்பார்த்தபடி உயரும். உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும்.



### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை வரவுகள் அதிகமாக திருப்திகரமான வாரமாக இருக்கும். நீண்ட நாளாக வராத கடன் பாக்கிகள் வசூலாகும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தார் மூலம் உதவிகள் தடைப்படாது. தொழில் தொடர்பாக எடுத்த புதிய முயற்சிகள் யாவும் வெற்றி அடைய கடின உழைப்பு தேவைப்படும் சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். தெய்வப் பிரார்த்தனையால் பெண்களின் வேண்டுதல்கள் நிறைவேற, வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும்.

# தி.மு.கவின் 'முத்தமிழ் முருகன்' மாநாடு அறிவிப்பு: இந்து வாக்குகளை கவரும் 'அரசியல் தந்திரமா'?

நந்தினி வெள்ளைச்சாமி

தேர்தல் நெருங்கிவரும் வேளையில், தமிழ்நாட்டில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நடத்தப்படும் என, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவித்திருப்பது, பாஜகவிடமிருந்து எதிர்ப்பைச் சந்தித்துள்ளது. பாஜக மட்டுமல்லாமல், 'முருகன் தமிழர்களின் இறைவன்' என்ற முழக்கத்தைத் தொடர்ந்து முன்வைத்து வரும் நாம் தமிழர் கட்சியும் இதை விமர்சித்துள்ளது. இந்து வாக்குகளை கவர்வதற்கான "அரசியல் தந்திரம்" என்று அக்கட்சிகள் தெரிவித்துள்ளன.

அமைச்சர் சேகர்பாபு சமீபத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில், "அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு ஜூன் அல்லது ஜூலையில் வெகுவிமரிசையாக நடைபெறும். உலகளவில் இருக்கும் முருக பக்தர்கள், முருக கோவில்களைப் பராமரிப்பவர்களை தமிழகத்திற்கு அழைத்து இரண்டு நாட்கள் மாநாடு நடத்தப்படும்" எனத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் கண்காட்சிகள், கூட்டங்கள் நடத்தப்படும் என்றும் ஆய்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் சேகர்பாபு தெரிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பு வெளிவந்த உடனேயே தமிழ்நாடு பாஜக இதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. பாஜக பொதுச் செயலாளர் ஆர். சீனிவாசன், "முதலில் பாஜக மத்திய அரசின் திட்டங்களை தங்கள் திட்டங்களாக காட்டிக் கொண்டு 'ஸ்டிக்கர்' ஒட்டியது. முருகனை தமிழ்நாட்டுக்கு மட்டும் சுருக்கிவிட முடியாது. அவரை உலகம் முழுவதிலும் வழிபடுகின்றனர். இத்தகைய சூழ்ச்சிகளில் தமிழ்நாட்டு மக்கள் சிக்க மாட்டார்கள்," எனத் தெரிவித்திருந்தார்.



இம்மாநாட்டை நடத்துவதில் எந்த அரசியல் நோக்கமும் இல்லை என்றும் ஆட்சி அமைத்ததில் இருந்தே முருகன் கோவில்களுக்காகப் பலவித திட்டங்களுக்கு நிதியுதவி செய்து வந்ததாகவும் சேகர்பாபு விளக்கம் அளித்தார்.

"திருச்செந்தூர் முருகன் கோவிலைப் புனரமைக்க தமிழக அரசு ரூ.300 கோடி நிதி ஒதுக்கியுள்ளது" என்றும் அவர் கூறினார். இதையொட்டித்தான் தற்போது சர்ச்சை எழுந்திருக்கிறது.

### "அரசியல் ஆதாயம்"

முருகனுக்கு மாநாடு நடத்துவது குறித்து பேசிய பாஜக தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன், "இது நிச்சயம் அரசியல் ஆதாயத்துக்காகத்தான்," என்று விமர்சித்தார்.

"தீபாவளி, விநாயகர் சதுர்த்திக்குக்கூட முதலமைச்சர் வாழ்த்து கூறியதில்லை. முருகனுக்கு முக்கிய நிகழ்வான தைப்பூசத்திற்குக்கூட வாழ்த்து கூறியதில்லை. அப்படியிருக்கும்போது, இப்போது முருகனுக்கு மாநாடு நடத்த வேண்டிய அவசியம் என்ன? சனாதனம் குறித்துப் பேசிய உதயநிதிக்கு எந்தவித கண்டிப்பும் தெரிவிக்காத முதல்வர் இதை நடத்துவது ஏன்?" என்று கேள்வி எழுப்பினார்.

"முப்பாட்டன் முருகன்", "குறிஞ்சி தந்த தலைவன்", "இன மூதாதை" என முருகன் "தமிழ்க்கடவுள்", "தமிழர்களுக்கான கடவுள்ற" என்ற வாதத்தை தொடர்ச்சியாக முன்வைத்து வருகிறது நாம் தமிழர் கட்சி. ஒவ்வொரு ஆண்டும் தைப்பூசம் அக்கட்சி சார்பாகக் கொண்டாடப்படுகிறது. முருகன் "இந்து கடவுள் அல்ல, தமிழர் கடவுள்" என்பது அக்கட்சியின் வாதம்.

இம்மாநாடு தொடர்பாக அக்கட்சியின் மாநில மகளிர் பாசறை ஒருங்கிணைப்பாளர் காளியம்மாள் பேசுகையில், "திராவிடத்தை விடுத்து, தமிழர்களின் கடவுளைக் கொண்டாடினால்தான் தமிழகத்தில் அரசியல் செய்ய முடியும் என்ற புரிதல் திமுகவுக்கு இப்போதுதான் வந்திருக்கிறது.

நாங்கள் முருகனைக் கொண்டாடியதற்கு எங்களை பாஜக "பி டீம்" என்றனர். இந்துத்துவத்திற்கும் வேலுக்கும் முருகனுக்கும் என்ன சம்பந்தம்? ஆனால், எங்களை நோக்கி ஆர்.எஸ்.எஸ்-இன் இன்னொரு அமைப்பு என்றனர். இப்போது இவர்கள் பாஜகவின் 'ஏ' டீமா?" என்றார்.



தேர்தல் நெருங்கி வரும் வேளையில், ஜூன் அல்லது ஜூலை மாதம் நடக்கவிருக்கும் மாநாடு குறித்து இப்போதே திமுக அறிவித்திருப்பது, தேர்தல் லாபத்திற்காகத்தான் என்றார் அவர். "இது அக்கட்சியின் அரசியல் உத்தி எனச் சொல்வதைவிட தந்திரம் என்றுதான் சொல்ல வேண்டும்," எனக் கூறுகிறார் காளியம்மாள்.

### "பா.ஜ.கவுக்கு பயம்"

இந்த விமர்சனங்கள் குறித்து பேசிய திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, "அறநிலையத்துறை வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் தான் இவை. இந்து சமய விதிகளுக்கு உட்பட்டு கோவில் நிகழ்ச்சிகள் நடத்துவது வழக்கம்தான். அதில் என்ன தவறு இருக்கிறது?" என்று கேள்வியெழுப்புகிறார்.


மேலும், "நாங்கள் முருகன் குறித்துப் பேசினால் பாஜகவுக்கு ஏன் கோபம் வருகிறது? அவர்கள் இதை வைத்து வியாபாரம் செய்ய வேண்டும் என நினைத்திருக்கிறார்கள் போல. அதனால் பயப்படுகிறார்கள் என நினைக்கிறேன். திமுகவின் கொள்கைகளைத் தெரிந்து கொள்ளாமல் பாஜக பேசுகிறது. இதற்கும் இந்துத்துவத்திற்கும் சம்பந்தமில்லை. எல்லா மதங்களுக்கும் அமைப்பு இருக்கிறது," என்றார். முஸ்லிம்கள் நலன்களுக்கென வக்பு வாரியம் இருப்பதையும் ஆர்.எஸ். பாரதி சுட்டிக்காட்டினார்.

### முருகனும் தமிழக அரசியல் கட்சிகளும்

முருகனை முன்வைத்து யாத்திரை செல்வதோ, முருகனைக் கொண்டாடுவதோ தமிழக அரசியல் கட்சிகளுக்குப் புதிதல்ல. கடந்த 2021ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலையொட்டி, 2020ஆம் ஆண்டு இறுதியில் அப்போதைய தமிழ்நாடு பாஜக தலைவராக இருந்தவரும் தற்போதைய மத்திய இணையமைச்சருமான எல். முருகன், திருத்தணி முதல் திருச்செந்தூர் வரை முருகனின் அறுபடை கோவில்களை மையமாக வைத்து 'வேல் யாத்திரை நடத்தினார்.

அதேபோன்று, 2021ஆம் ஆண்டு ஜனவரியில், திமுக நடத்திய மக்கள் கிராமசபைக் கூட்டத்தில், மு.க.ஸ்டாலினுக்கு வெள்ளி வேல் பரிசாக அளிக்கப்பட்டது. இதை, தங்களுக்குக் கிடைத்த வெற்றி என்றும் தங்களின் வேல் யாத்திரை வெற்றி பெற்றதை இது காட்டுவதாகவும் எல். முருகன் அப்போது தெரிவித்திருந்தார். பாஜக தவிர்த்து ஸ்டாலினுக்கு வேல் பரிசளிக்கப்பட்டதை அதிமுகவும் விமர்சித்தது.

"உண்மையான பிரார்த்தனை செய்யவேண்டும். நாம் மனப்பூர்வமாக பிரார்த்தனை செய்பவர்கள்.



ஸ்டாலின் வெளியில் பேசுவது ஒன்றாகவும், உள்ளே நினைப்பது ஒன்றாகவும் இருப்பதால், அவர் வேலை கையில் எடுத்தாலும், முருகனின் அருள் அவருக்குக் கிடைக்காது," என, எடப்பாடி பழனிசாமி அப்போது தெரிவித்திருந் தார்.

இத்தகைய விமர்சனங்களுக்கு அச்சமயத்தில் பதிலளித்த திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, "தமிழ்நாட்டில் முதலில் வேலுக்காக யாத்திரை நடத்தியவர் கலைஞர் கருணாநிதிதான். 1982இல் திருத்தணி கோவில் வேல் காணவில்லை என்பதை அப்போதைய முதல்வர் எம்ஜிஆர் ஏற்க மறுத்தார். திருச்செந்தூர் கோவில் வேல் மீட்கப்பட வேண்டும், திருடப்பட்ட வேல் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு நடைபயணம் சென்றவர் கருணாநிதி. இறுதியில், வேல் கண்டறிய அமைக்கப்பட்ட கமிட்டி அறிக்கையை எம்ஜிஆர் வெளியிடவில்லை. கலைஞர் தனது திறமையால் அந்த அறிக்கையை வெளியில் கொண்டு வந்தார்" எனத் தெரிவித்தார்.

### தமிழ் கலாசாரத்தில் முருகன்

இம்மாநாட்டை பாஜகவின் இந்துத்துவ அரசியலுடன் பொருத்திப் பார்ப்பது பொதுபுத்தியால் விளைந்தது என்கிறார், மூத்த பத்திரிகையாளரும் "கருணாநிதி - எ லைஃப்" உள்ளிட்ட புத்தகத்தின் ஆசிரியருமான ஏ.எஸ். பன்னீர்செல்வன்.

"பெரியாருடன் 1930களில் முதல் மொழிப்போரிலிருந்து உடன் இருந்தவர் மறைமலை அடிகளார். அவர் சைவ அறிஞர். தமிழ் மெய்யியல் வரலாற்றை எடுத்துக் கொண்டால் திருமூலரும் வள்ளலாரும்தான் இருக்கின்றனர். தமிழ் மரபில் இங்கிருக்கும் முதன்மை இசை வடிவம் காவடி சிந்துதான். இது 2,000 ஆண்டுகால மரபின் நீட்சி. முருகனுக்கு மாநாடு எடுப்பதை இதனுடன் தான் பொருத்திப் பார்க்க வேண்டும்" என்றார்.

முருகன் தமிழ் கலாசாரத்தில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தும் ஒரு கருப்பொருள் எனக் கூறும் பன்னீர் செல்வன், முக்கிய இசை வடிவமான "காவடிச் சிந்து" பாடல்களில் அதிகமான பாடல்கள் முருகனுக்காக பாடப்பட்டுள்ளதை உதாரணமாகக் காட்டினார். "முருகன் தமிழ் கலாசாரத்தின் அடையாளம்" என்றார் அவர்.

"சமபந்தியும் சாதி மறுப்பு திருமணமும்தான் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படை. முருகனுக்கும்



குறத்திக்குமான உறவு சாதி மறுப்பைத்தான் பேசுகிறது. அதேபோன்று, இந்த இரண்டையும் பாஜக எங்கே பேசுகிறது" என அவர் கேள்வி எழுப்பினார்.

திருவாரூர் தேரைச் சரிசெய்து இயக்கியது, கோவில்களில் அதிகமான குடமுழுக்கு நிகழ்ச்சிகளை நடத்தியது போன்றவற்றையும் குறிப்பிட்ட பன்னீர்செல்வன், இந்து சமய அறநிலையத்துறையே நீதிக்கட்சியின் நோக்கங்களுள் ஒன்றுதான் என்றார். பாஜக இதுகுறித்துப் பேசுவது பெரிய விஷயமாக பார்க்கப்படுவதெல்லாம் இந்த தேர்தல் வரைதான் என்றும் சிறிய தோல்வி ஏற்பட்டாலும் அக்கட்சியின் இத்தகைய பேச்சுகள் மக்கள் களத்தில் எடுபடாது என்றும் அவர் கூறினார்.

### தி.மு.கவும் கடவுளும்

பெரியார் 1950களில் விநாயகர் சிலைகளை உடைத்த போது, திராவிடர் கழகத்தின் வழிவந்த திமுக தலைவர் அண்ணா, "பிள்ளையாரை உடைக்கவும் மாட்டேன், பிள்ளையாருக்கு தேங்காயும் உடைக்க மாட்டேன்" என்றார். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்பதுதான் கடவுள் குறித்த திமுகவின் நிலைப்பாடாக அண்ணா கூறியது.

"கோவில் கூடாது என்பதல்ல. அது கொடியவர்களின் கூடாராமாகிவிடக்கூடாது" என "பராசக்தி" திரைப்படத்தில் வசனம் எழுதினார் முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதி. தற்போது, "இந்துக்களுக்கு எதிரானது திமுக" என்ற வாதத்திற்கு எதிராக அக்கட்சியின் தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் பலமுறை கருத்து தெரிவித்துள்ளார்.

"எங்கள் கட்சியில் 90 வீதம் இந்துக்களே உள்ளனர். கோவில்களுக்குச் சென்று வழிபடுவது அவரவர்களின் தனிப்பட்ட விருப்பம். திமுக இந்து விரோத கட்சி அல்ல" என்றார்.

தங்கள் குடும்பத்தினர் கோவில்களுக்குச் செல்வது அவர்களின் தனியுரிமை சார்ந்தது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

# ஜனாதிபதி தேர்தலை எதிர்நோக்குவதில் அரசியல் கட்சிகளின் தடுமாற்றம்!





வீரகத்தி தனபாலசிங்கம்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு இலங்கை இதுவரையில் எட்டு ஜனாதிபதி தேர்தல்களைக் கண்டிருக்கிறது. அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முகங்கொடுப்பதில் பிரதான அரசியல் கட்சிகள் மத்தியில் காணப்படக்கூடியதாக இருக்கின்ற தடுமாற்றத்தைப் போன்று முன்னைய எந்தவொரு தேர்தலிலும் நாம் காணவில்லை.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரா இல்லையா என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னமும் திட்டவட்டமாக அறிவிக்கவில்லை. அதேவேளை அவர் தனது ஐக்கிய தேசிய கட்சியை மாத்திரம் நம்பி தேர்தல் களத்தில் ஒருபோதும் இறங்கப் போவதுமில்லை.

மூன்று தசாப்த காலமாக அவர் தலைமையில் இருந்துவரும் ஐக்கிய தேசிய கட்சி அதன் வரலாற்றில் மிகவும் பலவீனமான நிலையில் இருக்கிறது. இரு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சியை அடுத்து மாற்றமடைந்த அரசியல் கோலங்களுக்கு மத்தியில் அவர் ஜனாதிபதியாக வந்த பின்னர் தோன்றியிருக்கும் புதிய சூழ்நிலையில் கட்சி மீட்சிபெறுவதற்கு அவரை மாத்திரமே நம்பியிருக்கிறது எனபது இன்றைய இலங்கை அரசியலில் ஒரு விசித்திரம்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னோடியாக பல கட்சிகளை உள்ளடக்கிய பரந்தளவிலான கூட்டணியை உருவாக்குவதற்கு விக்கிரமசிங்க இதுவரையில் முன்னெடுத்துவந்த முயற்சிகள் பெரிதாக வெற்றியளிக்கவில்லை. மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு ராஜபக்சாக்களை விட்டு வெளியேறிய சிறிலங்கா பொதுஜன பெரமுனை பாராளுமன்ற உறுப்பினர்களையே அந்த கூட்டணி முயற்சிக்கு அவர் முழுமையாக நம்பியிருந்தார்.

அந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்பார்த்ததைப் போன்று பொதுஜன பெரமுனவில் இருந்து பல உறுப்பினர்கள் அவர்களுடன் வந்து இணையவில்லை. அதேவேளை ராஜபக்ச சகோதரர்களுடனும் ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை நடத்துகிறார். இவர்களில் எந்த தரப்பினரை அவர் எப்போது கைவிடுவார் என்று எவருக்கும் தெரியவில்லை.

கடந்த வாரம் பொதுஜன பெரமுனவின் தலைவர்களான மகிந்த ராஜபக்சவுடனும் பசில் ராஜபக்சவுடனும் ஜனாதிபதி நடத்திய பேச்சுவார்த்தையில் கூட்டணி அமைப்பது குறித்து இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று செய்திகள் வெளியாகின. அத்துடன் பொதுஜன பெரமுனவின் அமைச்சர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் கட்சியின் தலைமைத்துவத்தை தவிர்த்து ஜனாதிபதி தனியாக அணுகுவதையும் ராஜபக்ச சகோதரர்கள் கடுமையாக ஆட்சேபித்ததாகக் கூறப்படுகிறது.

மக்கள் மத்தியில் தங்களது செல்வாக்கின் தற்போதைய நிலையை புரிந்துகொள்ளாதவர்களாக ராஜபக்சாக்கள் பழைய நினைப்பில் இலங்கையின் எதிர்கால அரசியல் போக்கை தங்களது கட்சியே தீர்மானிக்கும் என்ற தோரணையில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தங்களது ஆதரவைப் பெறுபவரே அடுத்த ஜனாதிபதியாக வருவார் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

பெரும்பாலும் ஜனாதிபதி விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், அவர்களின் ஆதரவைப் பெறுவது ஜனாதிபதிக்கு பாதகமாகவும் அமையலாம். அதை அவர் சிந்தித்துப் பார்க்காமல் இருக்கமாட்டார்.

அதேவேளை, தேர்தலில் வெற்றி பெறக்கூடிய சூழ்நிலை இல்லை என்றால் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை போட்டியில் இருந்து ஒதுங்கிக் கொள்ளும் தெரிவு எப்போதும் அவர் கைவசம் இருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் காரணமாக மக்கள் மத்தியில் தனது செல்வாக்கு அதிகரித்துவருவதாக விக்கிரமசிங்க நம்பிக் கொண்டிருக்கிறார். பொருளாதாரம் முழுமையாக மீட்சிபெறவேண்டுமானால் அவர் தொடர்ந்து ஜனாதிபதியாக பதவியில் இருக்கவேண்டும் என்று நம்புகின்ற ஒரு கணிசமான பிரிவினர் இருக்கிறார்கள்.

மக்கள் செல்வாக்கில் முன்னணியில்









இருந்துவரும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மிகவும் உற்சாகமாக அதன் பிரசாரத்தை முன்னெடுத்து வருகிறது. அதன் தலைவர் அநுரா குமார திசாநாயக்க முன்னரங்க ஜனாதிபதி வேட்பாளராக நோக்கப்படுகிறார். இந்தியா, சீனா உட்பட பல வெளிநாட்டு அரசாங்கங்களும் அவர் மீது கவனத்தைச் செலுத்துகின்றன. ஆட்சிக்கு வரமுடியும் என்ற நம்பிக்கையில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் தங்களது எதிர்கால அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்து மக்கள் மத்தியில் பேசுகிறார்கள்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் குழப்பநிலைக்கு உள்ளாகியிருக்கிறது. கட்சியின் தவிசாளர் சரத் பொன்சேகா உட்பட பல பாராளுமன்ற உறுப்பினர்களை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாதவராக பிரேமதாச இருக்கிறார். முன்னாள் படை அதிகாரிகளை கட்சியில் இணைத்துக்கொள்வது, பெண்களின் ஆதரவைத் திரட்டுவது உட்பட பல தந்திரோபாயங்களில் எதிர்க்கட்சி தலைவர் தேசிய மக்கள் சக்தியை பின்பற்றுவது போன்ற ஒரு தோற்றப்பாடு காணப்படுகிறது

தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஜனாதிபதி விக்கிரமசிங்க இன்னமும் அறிவிக்கவில்லை என்றபோதிலும், அவருக்கும் அநுரா குமாரவுக்கும் பிரேமதாசவுக்கும் இடையிலான மும்முனைப் போட்டியாகவே ஜனாதிபதி தேர்தல் அமையும் என்றே பொதுவில் எதிர்பார்க்கப்படுகிறது.

வேறு பல கட்சிகளின் வேட்பாளர்க ளும் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தனது கொள்கைத் திட்டத்து டன் ஜனாதிபதி உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துவந்தார். பொதுவேட்பாளராக போட்டியிடுமாறு தன்னை அணுகினால் அது குறித்து பரிசீலிக்க தயாராக இருப்ப தாகக் கூட அவர் கூறுகிறார். இந்த தடவை எதிரணியின் பொது வேட்பாள ராக எவரும் அறிவிக்கப்படக்கூடிய வாய்ப்பு இல்லை.

சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதாக முன்னர் அறிவித்தார். ஆனால் இப்போது அவர் அதைப் பற்றி பேசுவதாக இல்லை. எதிர்வரும் நாட்களில் பல்வேறு கூட்டணிகளை அமைக்கும் முயற்சிகளை அரசியல் கட்சிகள் முன்னெடுப்பதைக் காணக்கூடியதாக இருக்கும்.

இதனிடையே, முதலில் பாராளுமன்ற தேர்தலை நடத்தி பலம்வாய்ந்த அரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு சென்றால் சிறப்பான ஆட்சியை அமைக்கமுடியும் என்று பசில் ராஜபக்ச கூறுகிறார். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் விரும்புவதாக ஏற்கெனவே செய்திகள் வெளியாகின

பாராளுமன்றத்தை எந்த நேரத்திலும் கலைக்கக்கூடிய அதிகாரம் தற்போது ஜனாதிபதிக்கு இருக்கிறது. ஆனால், அதை தற்போதைய தருணத்தில் அவர் விரும்புவாரோ தெரியவில்லை. பாராளுமன்றத்தை கலைக்குமாறு ஜனாதிபதியைக் கோரும் பிரேரணை ஒன்றை மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் நிறைவேற்ற முடியும்.

ஆனால், ஆளும் கட்சிக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாத நிலையில், ஜனாதிபதி தேர்தலே முதலில் நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தும் எதிர்க்கட்சிகள் அத்தகைய பிரேரணைக்கு ஆதரவளிக்கப்போவதில்லை என்பது வெளிப்படையானது.ஷ

தற்போதைய அரசியல் நிலைவரங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அடுத்த பாராளுமன்ற தேர்தலில் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை ஆசனங்கள் கிடைப்பது சாத்தியமில்லை என்பதே அண்மைக்கால கருத்துக்கணிப்புக்களின் பொதுவான முடிவாக இருக்கின்ற நிலையில் பாராளுமன்ற தேர்தலை உடனடியாக நடத்தினால் பலம்வாய்ந்த அரசாங்கம் ஒன்றை அமைக்கமுடியும் என்று எந்த அடிப்படையில் பசில் ராஜபக்ச கூறுகிறார் என்று தெரியவில்லை.

ஜனாதிபதி தேர்தலுக்கு பிறகு பாராளுமன்ற தேர்தலை நடத்தினால் மக்கள் அறிவுபூர்வமான முறையில் வாக்களிப்பதில்லை என்று அவர் புதுவிதமான வாதத்தை முன்வைக்கிறார்.

'ஜனாதிபதி தேர்தலில் எந்த வேட்பாளராவது ஒரு வாக்கினால் வெற்றி பெற்றால் கூட அவர் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியினால் பாராளுமன்றத்தில் கணிசமான பெரும்பான்மை ஆசனங்களைப் பெறக்கூடியதாக இருக்கும். இது ஒரு நல்ல விடயமாக எனக்கு தெரியவில்லை. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்ற தேர்தலை நடத்தினால் கூடுதலான அளவுக்கு சமநிலையான பாராளுமன்றத்தை தெரிவுசெய்வதற்கு சிறப்பான வாய்ப்பு இருக்கிறது. 2019 ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ச வெற்றிபெற்ற பிறகு அடுத்த வருடம் பாராளுமன்ற தேர்தலில் பொதுஜன பெரமுன ஏறத்தாழ மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களை வென்றது. ஆனால் அது எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தியதாக நான் இப்போது நம்புகிறேன்" என்று ராஜபக்ச கடந்த வாரம் தொலைக்காட்சி பேட்டியொன்றில் கூறினார்.

**தமிழ்ப் பொது வேட்பாளர் யோசனை**

இது இவ்வாறிருக்க, ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்ற யோசனை குறித்து அண்மைய மாதங்களாக சில வடக்கில் பேசப்படுகிறது.

ஐந்து தமிழ்க் கட்சிகளை உள்ளடக்கிய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் தலைவர்கள் சில மாதங்களுக்கு முன்னர் பொதுவேட்பாளரை நிறுத்த வேண்டிய அவசியம் இருப்பதாக தங்களுக்குள் ஒரு முடிவுக்கு வந்தனர். அதன் சாதகபாதகங்கள் குறித்து அரசியல் அவதானிகளும் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னர் 15 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், போரின் விளைவான பெருவாரியான மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# பொதுவேட்பாளர் பெறும் வாக்குகள் தமிழர் நாடும் அரசியல் தீர்வை சர்வதேசத்துக்கு புலப்படுத்தும்!

பனங்காட்டான்

மாகாண சபைகளுக்குக் காணி அதிகாரம் இருக்குமென்று கூறிய ரணிலின் ஆட்சியில், தமிழ் மக்கள் தங்கள் மண்ணிலுள்ள வழிபாட்டுத் தலங் ணகளில் ஒன்றுகூட முடியாத நிலை அதிகரித்து வருகின்றது.

மதவெறி பிடித்த சிங்கள தொல் பொருள் திணைக்களமும் அவர்களுக்குத் தோள் கொடுத்து அலையும் காவல் துறையும் சிவராத்திரி நாளன்று வெடுக்குநாறி மலையில் நடத்திய எதேச்சாதிகாரத்தை எதுவும் தெரியாததுபோல பாசாங்கு செய்து கொண்டிருக்கிறது சிங்கள ஆட்சிபீடம்.

பௌத்த வழிபாட்டுத் தலமொன்றில் அரசமர இலையொன்றைக் கிள்ளினாலே பயங்கரவாதமாகப் பார்க்கும் ஆட்சித் தரப்பு, வெடுக்குநாறிமலையில் அரச இயந்திரம் மேற்கொள்ளும் அராஜகத்தை கண்மூடியவாறு அனுசரித்துச் செல்கிறது. தமிழ் ஊடகங்கள் மட்டுமே இதனை சுட்டிக்காட்டுகின்றன. சிங்கள, ஆங்கில ஊடகங்கள் எதுவுமே இடம் பெறாதது போன்று மௌனம் காத்து ஆட்சிபீடத்தைக் காத்து வருகின்றன.

தமிழராகப் பிறந்தவர்கள் நாளாந்தம் எல்லாவற்றுக்குமே போராடிக் கொண்டிருக்க வேண்டுமென்பது வாழ்க்கையாகி விட்டது. வேலன் சுவாமிகள் வீதியில் இறங்கி மக்களோடு மக்களாக நின்று - தேவைப்படும்போது அவர்களுக்குத் தலைமை தாங்கி நியாயம் கோரும் பேரணிகளில் காணப்படுகிறார்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய தலைவர், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் நியாயமான, செயற்படுத்தக்கூடிய ஒரு கோரிக்கையை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் முன்வைத்துள்ளார். வெடுக்கநாறி ஆலய பிரச்சனைக்கு சரியான தீர்வு கிடைக்கும் வரை இவர்கள் நாடாளுமன்றம் செல்வதில் அர்த்தமில்லை என்ற கோரிக்கையானது, நாடாளுமன்ற அமர்வுகளை இவர்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற அர்த்தமுள்ளது.

நாடாளுமன்றத்தில் தனித்தனியாக இவர்கள் உரையாற்றுவதை விடுத்து, அனைவரும் இணைந்து சரியான முடிவை பெற்றுத்தர வேண்டுமென இவர் கேட்டுள்ளார்.

அரசாங்கத்தின் சகல அடக்குமுறைகளுக்கும் எதிராக நாடாளுமன்றத்தைப் புறக்கணிப்பது பற்றி ஆராய வருமாறு தமிழ் தேசிய கட்சி எம்.பிக்களை சி.வி.விக்னேஸ்வரன் அழைத்துள்ளார். நாடாளுமன்ற பகிக்ஷ்கரிப்பு அழைப்பை முதலில் விடுத்தவர் அகத்தியர் அடிகளார் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

வெடுக்குநாறிமலை அராஜகத்தைத் தடுக்க என்ன செய்யலாம் அல்லது என்ன செய்ய வேண்டுமென்றவாறு நீதி கேட்கும் குரல்கள் பல திசைகளிலிருந்தும் வருகின்றபோதிலும், நாடாளுமன்ற பிரதிநிதிகள் அல்லது அவர்களின் கட்சிகளிலிருந்து இதுவரை எந்தவொரு கருத்தும் வரவில்லை.

ஆலய விவகாரத்தில் கைதாகி காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களை நீதிமன்றம் பிணையில் விடுவதோடு எல்லாமே காற்றோடு காற்றாகிப் போனால் ஆச்சரியப்பட வேண்டி வராது. சில மாதங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு நீதிபதி உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவி துறந்து நாட்டைவிட்டு ஓடிய போது ஆரம்பிக்கப்பட்ட மக்கள் போராட்டம் எவ்வாறு பிசுபிசுத்து முடிந்தது என்பது ஞாபகமிருக்கிறது.



தமிழர் பிரச்சனைகளில் ஆலய வழிபாடுகள் புதிய பிரச்சனையாகத் தொடரும் அதேவேளையில், இலங்கையின் ஜனாதிபதி தேர்தலும் புதுப்புது பிரச்சனைகளுடன் தலைதூக்குகிறது.

அரசியல் யாப்புக்கு இணங்க, வருகின்ற அக்டோபர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற வேண்டும். தேர்தல் நிச்சயம் நடைபெறுமென்று ரணில் விக்கிரமசிங்க பல தடவை கூறிவிட்டார். தாம் போட்டியிடப் போவதாகவும் ஒருவாறு அறிவித்து விட்டார். கடந்த வாரம் குளியாப்பிட்டியில் இதற்கான தேர்தல் பரப்புரைக் கூட்டத்தையும் அவர் ஆரம்பித்தார். ஆனாலும் ஏனோ பலருக்கும் தேர்தல் நடைபெறுமென்பதில் நம்பிக்கை ஏற்படவில்லை.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னராக நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குச் செல்ல ராஜபக்சக்களின் பொதுஜன பெரமுன நாட்டம் காட்டுவதாக அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. ஆனால், நாடாளுமன்றத்தைக் கலைத்து காபந்து அரசின் கீழ் ஜனாதிபதித் தேர்தலை நடத்த ரணில் திட்டமிடுவதாக பரபரப்புச் செய்திகள் வருகின்றன.

இன்னொரு புறத்தில், இரண்டு தேர்தல்களையும் ஒத்திவைக்க ரணில் திரைமறைவில் முயற்சி செய்வதாக சொல்லப்படுகிறது. இதற்கு தங்களின் பொதுஜன பெரமுன ஆதரவளிக்காது என்று அண்மையில் நாடு திரும்பிய பொதுஜன பெரமுன அமைப்பாளர் பசில் ராஜபக்ச தொலைக்காட்சி பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

பெரமுனவில் கணிசமானோர் - முக்கியமாக அமைச்சர்களாகவும் ராஜாங்க அமைச்சர்களாகவும் இருப்பவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் தங்கள் ஆதரவை ரணிலுக்கு வழங்குவதற்கு தயாராகியுள்ளனர். சிலர் பகிரங்கமாகவும் இதனை வெளிப்படுத்தியுமுள்ளனர். சஜித் பிரேமதாசவின் கட்சியைச் சார்ந்த ஒரு அணியினர்கூட ரணிலுடன் சேர்வதற்கு தயா ராக இருப்பதாக அவருடன் நெருக்க மானவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித் துள்ளனர். இதனைவிட சில சொரியல் களும் தாராளமாக உண்டு.

பொதுஜன பெரமுன தனது ஆதரவை ரணிலிடமிருந்து மீளப்பெற்றாலும், வெவ்வேறு தரப்புகளிலிருந்து கிடைக்கும் ஆதரவுத் துணிச்சலுடன் ரணில் ஜனாதிபதி தேர்தலை சந்திப்பாரென்பது அவரைச் சுற்றியுள்ள ஹரின் பெர்ணான்டோ, மனுக்ஷ நாணயக்கார, வஜிர அபேவர்த்தன, சாகல ரட்னாயக்க போன்றோரின் கணிப்பு.

இது விடயத்தில் இரண்டு கருத்துகளை ஆழமாக நோக்க வேண்டும். சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி மக்கள் செல்வாக்கைப் பெற்றிருந்தாலும், நாட்டின் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து முன்னெடுத்துச் செல்லக் கூடிய தலைமை அங்கில்லையென்று சஜித்தை மட்டம்தட்டிக் கூறியுள்ளார் பசில் ராஜபக்ச.

***சிங்கள தேசம் கட்சிகள் ரீதியாக பிளவுபட்டுள்ள இன்றைய அரசியல் காலநிலை ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவர் போட்டியிடுவதற்கு மிகச் சாதகமானது. ஒற்றைக் கோரிக்கையில் ஒன்றுபட்டு இந்தப் போட்டி அமையுமாயின், 1982 ஜனாதிபதித் தேர்தலில் குமார் பொன்னம்பலம் தனித்து நின்று பெற்றதைவிட கூடுதலான வாக்குகளை பெறமுடியும். இது தமிழர் விரும்பும் அரசியல் தீர்வை சர்வதேசத்துக்கு எடுத்துக்கூறும்.***

இத்துடன் நிறுத்தாது, இன்றைய நெருக்கடியைத் தீர்க்க பொதுஜன பெரமுனவும் ரணிலின் ஐக்கிய தேசிய கட்சியும் சஜித்தின் ஐக்கிய மக்கள் கட்சியும் ஓரணியாக இணைய வேண்டுமென்ற தமது விருப்பத்தையும் பசில் பகிரங்கப்படுத்தியுள்ளார்.



இதனூடாக அவருக்கிருக்கும் இரண்டு அச்சங்கள் வெளிவந்துள்ளன. முதலாவது - தேசிய மக்கள் சக்தியென பெயர்கொண்டுள்ள ஜே.வி.பி.யின் அநுரகுமார திசநாயக்கவை ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிக்க வேண்டுமானால் மற்றைய மூன்று கட்சிகளும் இணைந்தாக வேண்டுமென்பது. இரண்டாவது - சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியுடன் ரணிலின் ஐக்கிய தேசிய கட்சி இணைந்து தேர்தலைச் சந்தித்தால் பொதுஜன பெரமுனவின் எதிர்காலம் சூனியமாகிவிடுமென்பது. இந்தப் பின்னணியிலேயே மூன்று கட்சிகளின் இணைப்பு வேண்டுமென அவர் விரும்புகிறார்.

இவ்வாறான இணைப்பொன்று ஏற்படுமானால், தற்போது பெரமுனவுக்குள் ஜனாதிபதி வேட்பாளருக்கு பொருத்தமானவர் இல்லாத நிலையில் ரணிலை வேட்பாளராக்கி வெற்றி பெறச்செய்து, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தங்கள் கட்சியை நிலைநிறுத்திக் கொள்ளலாமென்ற கபடத்தனம் பசிலிடம் மறைந்திருக்கிறது.

ஆனால், ரணில் இதனை வேறுவிதமாக நோக்கினால் - அதாவது சஜித் அணியை தம்முடன் இணைத்துக் கொண்டு, தம்மோடு இணையக் காத்திருக்கும் பெரமுனக்காரர்களையும் சேர்த்துக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால், தம்மை ஓரங்கட்ட நினைக்கும் பசில் தரப்பை - அவரின் பெரமுனவை அறகலய கால முடிவுக்குக் கொண்டு வரலாம் எனும் குள்ளநரி மூளை வெற்றி பெறலாம்.

இப்போதுள்ள கேள்வி தமிழர் தரப்பு என்ன செய்யப் போகிறது. ‘மக்கள் மனு’ - சிவில் சமூகம் ஏற்பாடு செய்த கருத்துப் பகிர்வு அண்மையில் டான் தொலைக் காட்சியில் ஒளிபரப்பானது. ஜனாதிபதித் தேர்தலின் தமிழர் தரப்பிலிருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றி பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

முன்னொரு காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரித்த தமிழர்கள், பின்னர் தோற்கடிக்கப்பட வேண்டியவர்களை இலக்கு வைத்து மற்றைய போட்டியாளர்களுக்கு வாக்களித்து வந்தனர். ஆனாலும், வெற்றி பெற்றவர்கள் தமிழர்களின் நியாயமான கோரிக்கை எதனையுமே ஒருபோதும் நிறைவேற்றவில்லை. தமிழினம் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டே வருகிறது.

அதேவழியைத்தான் இனியும் பின்பற்றப் போகிறார்களா என்ற கேள்வி இந்தக் கருத்துப் பகிர்வில் இடம் பெற்றது. தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தமக்குள் வெவ்வேறு விடயங்களில் பிரிந்து நின்றாலும், சமஷ்டிக் கோரிக்கையை அவர்கள் ஒரு குரலில் கேட்பதை அண்மைக் காலங்களில் காண முடிகிறது. இந்தக் கோரிக்கையை பெறுவதற்கான தமிழ் மக்களின் சர்வஜன வாக்கெடுப்பாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்த வேண்டிய காலத்தின் கட்டாயம் இப்போது காணப்படுகிறது.

1982 ஜனாதிபதித் தேர்தலில் குமார் பொன்னம்பலம் போட்டியிட்டு ஐக்கிய தேசிய கட்சிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் தமிழர் தாயக வாக்களிப்பில் நல்லதொரு பாடம் கற்பித்தது வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவரை பொதுவேட்பாளராக நியமித்து, அவர் பெறும் வாக்குகள் ஊடாக தமிழர் விரும்பும் நியாயமான கோரிக்கையை சர்வதேச சமூகத்துக்குப் புலப்படுத்த முடியும். இச்சந்தர்ப்பத்தில் கூட தமிழ் தேசிய கட்சிகளால் ஒன்றுபட முடியவில்லையெனில், பின்னர் எப்போது சாத்தியமாகும்? ●

# இந்திரா காந்திக்கும் மோடிக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

நியூசிலாந்து சிற்சபேசன்





“ஒப்பிலாத சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை” என்று பாரதி கொண்டாடிய இந்தியத் தேசத்தின் சனத்தொகை 140 கோடியைக் கடந்திருக்கின்றது.

அஃது உலகிலேயே அதியுச்சமான சனத்தொகையாகும். ஒரு பேச்சுக்குச் சொல்வதெனில், பூமிப்பந்திலுள்ள ஒவ்வொரு நூறுபேரில் பதினேழுபேர் இந்தியராகும்.

இவ்வாறானதொரு தேசத்திலே, சனநாயக கட்டமைப்பு துடிப்பானதாகவே காணப்படுகின்றது. அதிலே பிரதமரொருவரின் வகிபாகம் முக்கியத்துவம் பெறுகின்றது.

சுதந்திரத்துக்குப் பின்னரான கடந்த ஏழு தசாப்தங்களிலே நேரு முதல் மோடி வரையில் பதின்னான்கு பிரதமர்களை இந்தியா கண்டிருக்கின்றது. அதிலே, ஜனரஞ்சகமான தலைவர்களாக இந்திரா காந்தியும், நரேந்திர மோடியுமே எழுச்சியடைந்தனர்.

நேருவும் பிரசித்தமான தலைவரேயாகும். ஆனால், நேருவின் பிரசித்தம் விடுதலைப் போராட்ட வரலாற்றிலிருந்து தாய்வீட்டுச் சீதனமாகக் கிடைத்ததாகும்.

நேருவின் மகளாக அரசியல்பரப்பில் காலடிவைத்தவரே இந்திரா காந்தியாகும். தந்தைவழி கிடைத்த அரசியல் அந்தஸ்தை தக்கவைத்துக் கொள்ள கடுமையாக உழைத்தவர்.

நேருவுக்குப் பின்னர் பிரதமரான சாஸ்திரி 1966ல் மறைந்தார். அதன் பின்னரான உட்கட்சிப் பிணக்குகளை இந்திரா காந்தி துணிவுடன் எதிர்கொண்டார். மொரார்ஜி தேசாயை தோற்கடித்தார். அதுவே, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களுடனான மோதலின் ஆரம்பமாகியது. 1969ல் காங்கிரஸ் பிளவடைந்தது.

மூத்த தலைவர்கள் ஒன்று திரண்டனர். கர்மவீரர் காமராஜர் தலைமையில் ஸ்தாபன காங்கிரஸ் உருவாகியது. அதனை இந்திரா காந்தி துணிவுடன் எதிர்கொண்டார். 1970 பொதுத்தேர்தலிலே வெற்றிபெற்றுப் பிரதமரானார்.

அரசியலில் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள தனித்துப் போராடினார். அடி மேல் அடிவைத்தே முன்னேற்றங்களை அடைந்தார். கட்சியையும், தேசத்தையும் துணிச்சலாக வழிநடாத்தினார்.

சீனாவுடனான மோதல்களை உறுதியுடன் கையாண்டார். பங்களாதேசத்தின் விடுதலையின் மையசக்தியானார். அதனூடாக, இந்தியப் பிராந்தியத்தின் ஒப்பற்ற சக்தியாக வளர்சியடைந்தார்.

அஃது அமெரிக்க - சோவியத் முறுகல் காலமாகும். நேருவின் இந்தியா அணிசேராக் கொள்கையை முன்னிறுத்தியது. அதிலிருந்து இந்திரா காந்தி வேறுபட்டார். அணிசேராக் கொள்கையுடன் சமாந்திரமாக, இந்திய - சோவியத் உறவை வளர்ப்பதில் துணிச்சலை வெளிப்படுத்தினார்.

உள்நாட்டில் சமஸ்தானங்களை இல்லாமல் செய்தார். வங்கிகளை தேசியமயமாக்கினார். சீக்கியர்களின் புனிதத் தலமான பொற்கோயிலினுள் இராணுவத்தை அனுப்பினார்.

இவ்வாறு தீர்க்கமாக முடிவெடுக்கும் தலைவராக இந்திரா காந்தி எழுச்சியடைந்தார். இந்திராவே இந்தியா என்றும் சொல்லும் நிலைக்கு உயர்ந்து ஜனரஞ்சகமான தலைவரானார்.

இந்திரா காந்திக்குப் பின்னர் ஜனரஞ்சகமான தலைவராக நரேந்திர மோடியே எழுச்சியடைகின்றார்.

மோடி, குடும்பப் பின்னணியூடாக அரசியலில் நுழைந்தவரல்ல. கீழ்மட்டத்திலிருந்து கடுமையாக உழைத்தவர். ஒவ்வொரு படிக்கட்டுகளாக ஏறியவர். இளவயதிலேயே ஆர்.எஸ்.எஸ் என்று சொல்லக்கூடிய இந்து தேசியவாத அமைப்பின்பால் ஈர்க்கப்பட்டவர். துறவு வாழ்க்கையைத் தேடியவர். 1970களில் ஜனசங்கத்தின் செயற்பாடுகளில் ஈடுபட ஆரம்பித்தார். ஆர்எஸ்எஸ் அமைப்பின் பிரச்சாரகர் ஆனார். அவசரகாலச் சட்டத்துக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டார். காலவோட்டத்தில் ஆர்எஸ்எஸ் அமைப்பு, மோடியை அரசியல் பணிகளுக்காக பாரதிய ஜனதாக் கட்சிக்கு அனுப்பியது.

1987ல் அகமதாபாத் மாநகரசபைத் தேர்தலிலே மோடியின் தலைமைப் பண்பு கவனிப்பைப் பெற்றது. அவருடைய தேர்தல் யுக்தியே, கட்சியின் வெற்றிக்கு வழிவகுத்ததாகக் கருதப்பட்டது.

1990இல் அத்வானியின் ரதயாத்திரை, அதனையடுத்து முரளி மனோகர் ஜோஷியின் ஒற்றுமைக்கான யாத்திரை போன்றவைகளை ஒருங்கிணைத்ததிலே மோடியின் ஆளுமை பரவலான கவனத்தை ஈர்த்தது.

பல்வேறு தேர்தல்களிலேயும் அயராது உழைத்தார். தேர்தலிலே வெற்றி பெறுவதற்கான பாஃர்முலாவை உள்ளங்கையில் சுருட்டிவைத்திருந்தார். தேர்தல் வெற்றிகளை கட்சிக்கு குவித்தார். அதனால் மோடியின் பெறுமதியை கட்சி அங்கீகரிக்க ஆரம்பித்திருந்தது.

2001இல் குஜராத் துணை முதலமைச்சராகும் வாய்ப்பைக் கட்சி வழங்கியது. அதனை மோடி நிராகரித்தார்.

ஒன்றில், குஜராத்துக்கான முழுப் பொறுப்பையும் ஏற்பதற்கு முதலமைச்சர் பதவியைத் தரவேண்டும். இல்லையேல், ஒரு பதவியுமே வேண்டாம் என்றார். கட்சி இறங்கிவந்தது. மோடி ஏறிக் கொண்டார்.

குஜராத் மாற்றத்தின் ஆரம்பமாகியது. தொழில்துறை வளர்ச்சி என்பதற்கு அப்பால், சாதாரணர்களும் நேரில் கண்ட நிலத்தடிநீர்வளம், நீர்ப்பாசனம் என பன்முகப்பட வெற்றிகள் குவிந்தன. அதிலே, 2002 குஜராத் கலவரம் கறையாகியது. இருந்தாலும்கூட, மோடி சளைத்துவிடவில்லை.

“டெல்லியிலே ராசாவாக” கனவு கண்டார். தேசத்தின் தலைவராகத் தன்னை சந்தைப்படுத்தினார். பிர மாண்டத்தை உருவாக்க பி.ஆர் நிறுவனங்களின் உதவியை நாடினார். வைத்த குறி தப்பவில்லை. 2014ல் இந்தியப் பிரதமரானார்.

பிரதமராக மோடியின் செயற்பாடுகள் தீர்க்கமானவையாக வெளிப்பட்டன. குடியுரிமைச் சட்டத்திருத்தம், ஜம்மு - காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்து ரத்து, ரூபாய் நோட்டுகளில் மாற்றம் போன்றவை மோடியின் துணிவைப் பறைசாற்றின.

சர்வதேச அரங்கிலே பிராண்ட் இந்தியாவை சந்தைப்படுத்துவதில் மோடி வெற்றி பெறுகின்றார். மத்திய கிழக்கில் உறவு வலுவடைந்திருக்கின்றது.

இவ்வாறு தீர்க்கமாக முடிவெடுக்கும் மோடி ஜனரஞ்சகமான தலைவராக எழுச்சியடைகின்றார்.

தேசப்பற்று, கொள்கைப்பற்று, அயராதஉழைப்பு, விடாமுயற்சி, தொலைநோக்கு, துணிவு, தீர்மானமெடுப்பதில் தயக்கமின்மை போன்ற குணாதிசயங்களே நல்ல தலைவருக்குரிய பண்புகளெனச் சிலாகிக்கப்படுகின்றன.

அத்தகையை பண்புகளை இந்திரா காந்தி வெளிப்படுத்தினார். மோடி வெளிப்படுத்துகின்றார்.

அந்தவகையிலேயே தனித்துவமான ஆளுமை வெளிப்படுகின்றது. அதுவே சாதாரணர்களையும் பின்தொடரச் செய்கின்றது.

அதனாலேயே, காஷ்மீர் முதல் கன்னியாகுமாரி வரை அறியப்படுகின்ற ஜனரஞ்சகமான தலைவராக இந்திரா காந்தி காணப்பட்டார். நரேந்திர மோடி காணப்படுகின்றார்.

அதுவே இந்திரா காந்திக்கும், நரேந்திர மோடிக்கும் உள்ள ஒற்றுமையாகும்.





# ரணில் ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கிறாரா? அல்லது தன்னைப் பாதுகாக்கிறாரா?

கந்தையா அருந்தவபாலன்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது ஆட்சி ஆட்டம் காணத் தொடங்கியபோது மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியிலிருந்து ராஜினாமா செய்ய வைத்து ரணிலைப் பிரதமராக்கியதும், அதனைந் தொடர்ந்து கோட்டபாய பதவி துறக்க ரணில் பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதியானது தொடக்கம் இன்றுவரை எதிர்க்கட்சிகள் ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கும் ஒருவராக ரணிலைப் பரப்புரை செய்து வருவதுடன் மகிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ போன்று 'ரணில் ராஜபக்ஷ'என்ற அடைமொழியையும் அவருக்குச் சூட்டி அழைத்து வருவதையும் அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைகள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ள இந்நேரத்தில் தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி போன்ற எதிர்க்கட்சிகளின் கூட்டங்களில் இதுவே பிரதான பேசு பொருளாகவும் இருந்து வருகிறது. அதிலும் குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ அவர்கள் ரணில் ராஜபக்ஷக்களைப் பாதுகாப்பதைத் தவிர நாட்டு மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை என்று தான் கலந்து கொள்ளும் அனைத்துக் கூட்டங்களிலும் குற்றஞ் சாட்டி வருவதையும் அவதானிக்கலாம். சஜித் குற்றஞ் சுமத்துவது போல ரணில் உண்மையில் ராஜபக்ஷக்களைக் காப்பாற்றும் வேலையை மட்டுந்தான் செய்கிறாரா? நாட்டுக்கு எதுவும் செய்யவில்லையா? அல்லது தன்னைப் பாதுகாத்துக் கொண்டு நாட்டுக்கு ஏதாவது செய்ய முனைகிறாரா? இக்கேள்விகளுக்கு நாம் விடை தேடவேண்டுமெனில் நாட்டின் இன்றைய அரசியல் நிலை, அதில் ரணிலின் வகிபாகம் மற்றும் நாட்டின் பொருளாதார நிலை என்பவற்றின் பின்புலத்தில் வைத்தே விடை தேடவேண்டும்.

2020 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் எந்தவொரு தொகுதியிலும் வெற்றி பெறாத ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தேசியப் பட்டியல் மூலம் கிடைத்த ஒரேயொரு ஆசனம் மட்டுமே இன்று பாராளுமன்றத்தில் உள்ளது. மகிந்தவின் கூட்டாளிகள் பலர் இன்று பொதுஜன பெரமுனக் கூட்டணியிலிருந்து வெளியேறியிருந்தாலும்கூட இன்றும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப்பலம் அக்கட்சியிடமே உள்ளது. அத்துடன் அமைச்சரவையும் அதன் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. என்னதான் நிறைவேற்று அதிகாரங்கள் ஜனாதிபதியின் கையில் குவிந்திருந்தாலும் நாட்டை நிர்வகிப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு உட்பட சகல சட்டங்களும் பொதுஜன பெரமுனவின் கட்டுப்பாட்டிலுள்ள நாடாளுமன்றத்தினாலேயே அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். அதேபோல அமைச்சரவையின் தலைவர் ரணிலாக இருந்தாலும்கூட அவரால் தனித்து எவ்வித தீர்மானங்களையும் எடுக்க முடியாது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தான் விரும்பிப் பொறுப்பேற்ற ஜனாதிபதிப் பதவியை இயன்றவரை தக்கவைக்க வேண்டுமெனில் மகிந்த தரப்புடன் சமரசமாகச் செல்ல வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இதுவொன்றும் ரணிலுக்குத் தெரியாததல்ல. இவை எல்லாவற்றையும் எதிர்பார்த்துத்தான் அவர் பதவியைப் பொறுப்பேற்றார்.

ரணில் ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கிறார் என்பதன் மூலம் எதிர்க்கட்சிகள் கருதுவது என்ன? ராஜபக்ஷக்கள் மேற்கொண்ட அதிகாரமீறல்கள், ஊழல் முறைகேடுகள், தவறான பொருளாதாரத் தீர்மானங்கள் என்பவற்றுக்கு அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று கருதுகிறார்களா? இலங்கையில் ஆட்சியிலிருந்த தலைவர்களில் அதிகார



மீறல்கள், ஊழல் முறைகேடுகளில் ஈடுபடாத தலைவர்கள் எத்தனை பேர் உள்ளனர்? குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக சிறிமாவோவின் அரசியலுரிமை பறிக்கப்பட்டமை, பொன்சேகா பதவியிறக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டமை தவிர அதிகார, ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்ட எந்தத் தலைவர் மீதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வரலாறில்லை. எதிர்த்தரப்பில் இருக்கும்போது இவ்வாறான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவோர் ஆளுந்தரப்பாக மாறும்போது வசதியாக மறந்துவிடுவர். இவ்விடயத்தில் ஆளும் வர்க்கம் எப்பொழுதும் ஒருவரை ஒருவர் காப்பாற்றிக் கொள்வதே இலங்கையின் ஆளுவோர் பண்பாடு. நாளைக்கு சஜித் தரப்பு ஆட்சிக்கு வந்தாலும் மகிந்த தரப்பின் மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என்பதே யதார்த்தம். இன்று ராஜபக்ஷக்கள் மீது விரல் நீட்டும் ஜே.வி.பி மிகமோசமான அதிகார, ஊழல், ஜனநாயக உரிமை மீறல்கள் நடைபெற்ற 2010-15 மகிந்த ஆட்சியின் பங்கு தாரர்கள் என்பதை மறந்து விட்டார்கள். 2015 இல் மைத்திரி - ரணில் நல்லாட்சியில் சஜித் ரணிலுக்கு அடுத்த நிலையில் அதிகாரம் பெற்றிருந்த ஓர் அமைச்சர். அப்போது முன்னைய ஆட்சியில் ராஜபக்ஷக்கள் செய்த மீறல்களுக்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் ஏன் குரல் எழுப்பவில்லை? அதை விடுவோம். தங்களது ஆட்சியில் இடம்பெற்ற மிகமோசமான மத்தியவங்கி பிணைமுறி மோசடியில் தொடர்புபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு சஜித் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டார்? குறைந்தது அக்குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் தான் அமைச்சர் பதவியைத் துறப்பேன் என்று ஓர் அறிக்கைதானும் விட்டாரா? இல்லையே. இதற்கு மேலாக சஜித் மீதும் நிதி முறைகேடுகள் தொடர்பான குற்றச் சாட்டுகள் உள்ளனவே. 2019 ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காகவே அவரது அமைச்சினூடாகப் பல ஆயிரம் பேருக்கு வீட்டுத் திட்ட உதவி என பல கோடி ரூபாக்களை கிள்ளித் தெளித்தது எந்தவகையைச் சேரும்? அதில் தொடங்கப்பட்ட வீட்டு வேலைகள் இன்றும் கைவிடப்பட்ட நிலையில் அப்படியே உள்ளனவே. இவைகளுக்கு சஜித் பொறுப்புக் கூறுவாரா?

அரகலயவைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட குழப்பகரமான நிலைமையில் மகிந்த தரப்புக்கு ரணிலுக்கு பிரதமர் பதவியை வழங்குவதற்கு உள்ளூர விருப்பம் இருந்த போதிலும் கோத்தாபயவின் முதல் தெரிவாக சஜித்தே இருந்தார். பாராளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவுக்கு அடுத்தபடியாக கூடுதலான உறுப்பினர்களைக் கொண்ட கட்சி என்ற வகையிலும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையிலும் அது சரியான தெரிவும்கூட. ஆனால் சஜித் கோதாபயவின் அழைப்பை அடியோடு நிராகரித்து விட்டார். நாட்டில் அன்றிருந்த மிக மோசமான பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் சூழ்நிலையில் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்ப

**தங்களது நல்லாட்சி ஆட்சியில் இடம்பெற்ற மிகமோசமான மத்தியவங்கி பிணைமுறி மோசடியில் தொடர்புபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு சஜித் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டார்? குறைந்தது அக்குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் தான் அமைச்சர் பதவியைத் துறப்பேன் என்று ஓர் அறிக்கைதானும் விட்டாரா? இல்லையே. இதற்கு மேலாக சஜித் மீதும் நிதி முறைகேடுகள் தொடர்பான குற்றச் சாட்டுகள் உள்ளனவே.**

தற்கான துணிவும் தன்னம்பிக்கையும் அவரிடம் இருக்கவில்லை என்பதே யதார்த்தம். அடுத்து சரத் பொன்சேகாவுக்கு விடுக்கப்பட்ட அழைப்பும் நிராகரிக்கப்பட இறுதித் தெரிவாகவே ரணில் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். ரணிலிடம் பிரதமர் பதவியை வழங்குவதில் இந்தியாவுக்கு உடன்பாடில்லாத ஒரு சூழ்நிலை இருந்தும் கூட வேறு தெரிவுகளோ அன்றிக் கால அவகாசமோ கோதாபயவுக்கு இருக்கவில்லை. மறுபுறத்தில் ரணிலைப் பொறுத்த மட்டில் இந்த அரசியல் சூதாட்டத்தில் அவருக்கு இழப்பதற்கு எதுவுமிருக்கவில்லை. ஏனெனில் அவரது அரசியல் அஸ்தமனத்தின் இறுதிக்கட்டத்தில் தனியொருவனாக பாராளுமன்றத்திற்கு வந்த ஒருவர். ஆனாலும் துணிவும் தன்னம்பிக்கையும் அவரிடம் இருந்ததாலேயே தயங்காது அப்பதவியைப் பெற்று முயன்று பார்க்க முடிவெடுத்தார். உண்மையில் ரணிலின் முயற்சி என்பது ' மயிரைக் கட்டி மலையை இழுப்பதற்கு' ஒப்பானது. வந்தால் மலை. போனால் மயிர். ஆயிரம் விமர்சனங்கள், பல நெருக்கடிகள் காணப்படினும் அவரது முயற்சி வீண் போகவில்லை என்பதே யதார்த்தம். ரணில் பதவியேற்ற போது நாடு இருந்த நிலையையும் இன்றைய நிலையையும் ஒருகணம் சிந்திப்பவர்கள் இதனை மறுக்கமாட்டார்கள். ஆர்ப்பரிக்கும் கடலில் கப்பல் செலுத்துபவர்களே சிறந்த மாலுமிகளாக வருவர்.

எதிர்க்கட்சிகளால் ரணில்மீது முன்வைக்கப்படும் இன்னொரு குற்றச்சாட்டு ஐ.எம்.எவ் இடம் கடன் பெற்றமையும் அதற்காக அந்நிறுவனம் முனவைத்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டமையாகும். உண்மையில் ஐ.எம்.எவ். இடம் கடன் பெறவேண்டுமெனில் கடுமையான சில நடவடிக்கைகளை கடன் பெறும் நாடு மேற்கொள்ளவேண்டியது தவிர்க்க முடியாதது. குறிப்பாக மானியங்களை நிறுத்தல், அரச செலவுகளைக் கட்டுப்படுத்தல், அரச வர்த்தக நிறுவனங்கள் தமது செலவுகளை ஈடுசெய்யும் வகையில் வருமானங்களை ஈட்டுதல் இல்லையேல் தனியார்மயப்படுத்துதல், வரி வீதங்களை மாற்றியமைப்பதன் மூலம் அரச வருமானத்தை அதிகரித்தல் போன்ற பல நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருப்பதுடன் பிரதான கடன்வழங்குநருடனும் இணக்கப்பாட்டை உருவாக்க வேண்டியதும் அவசியமானதாகும். இவை நாட்டில், குறிப்பாக மக்களுக்கு பல்வேறு நெருக்கடிகளை உருவாக்கும் என்பது உண்மையாயினும் மாற்றுத் தெரிவுகள் எதுவுமில்லாத நிலையில் அதனூடாக மீளமுடியுமா எனப் பரீட்சிப்பதே ஒரே வழியாகும். நடுக்கடலில் தூக்கியெறியப்பட்ட ஒருவன் கடலில் கிடைக்கும் ஏதாவதைப் பிடித்துக்கொண்டு கரைசேர முயற்சிப்பதை விடுத்து தன்னைக் காப்பாற்றக் கப்பல் வருமென எதிர்பார்த்து நடுக்கடலில் உயிரைவிடமுடியாது. ரணிலின் இடத்துக்கு எவர் வந்திருந்தாலும் அந்நேரத்தில் இதைத்தவிர வேறு தெரிவுகள் அவர்களுக்கு இருந்திருக்க முடியாது. சஜித் பதவிக்கு வந்தாலும் இன்னும் சில ஆண்டுகளுக்கு இதனைத் தொடர்வதைத் தவிர வேறு வழி இப்போதைக்கு இருக்கப் போவதில்லை. ஜே.வி.பி பதவிக்கு வந்தாலும் இதே நிலைதான். இதனைவிடுத்து ஜே.வி.பி எடுத்தேன் கவிழ்த்தேன் என முடிவெடுக்குமானால் கோத்தாபயவுக்கு ஏற்பட்ட நிலையே அதற்கு ஏற்படும். இந்த உண்மையை சஜித் தரப்பில் இருப்பவரும் சஜித் ஆட்சிக்கு வந்தால் நிதியமைச்சராக வருவார் என எதிர்பார்க்கப்படுபவருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ரணில் பொதுஜன பெரமுனவில் முற்று முழுதாகத் தங்கியிருந்தாலும்கூட அக்கட்சியினர் இழுக்கிற பக்கத்துக்கெல்லாம் இழுபட்டுப் போகவில்லை என்பதை பல விடயங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. கடந்த காலத்தில் மோசமான விமர்சனங்களுக்குள்ளான மகிந்தானந்த அளுத்கமகே, ஜோன்சன் பெர்னாண்டோ போன்ற பலருக்கு அமைச்சர் பதவி வழங்குமாறு பஸிலால் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இதுவரை ரணில் அதனை வழங்கவில்லை. இதுபோன்ற பல காரணங்களால்தான் இன்று நாமல் தலைமையில் ரணிலுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டைக் கொண்ட ஒரு குழுவினர் பொதுஜன பெரமுனவில் இயங்கி வருகிறார்கள். அண்மையில் உள்ளூர் ஊடகமொன்றுக்கு பஸில் ராஜபக்ஷ

(14ஆம் பக்கம் பார்க்க)

# கவிஞர் வி. கந்தவனம்: எம்மைவிட்டுப் பிரிந்தமை எமக்குப் பேரிழப்பாகும்

குரு அரவிந்தன்

கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்தது எமக்கு, குறிப்பாகக் கனடிய மக்களுக்குப் பேரிழப்பாகும்.

சாவகச்சேரி நுணாவில் மேற்கில் விநாயகர் - சின்னம்மா தம்பதிகளுக்கு மகனாக 28.10.1933 ல் பிறந்த கவிஞர் கந்தவனம் அவர்கள் கனடாவில் தனது பவழ விழாவைக் கொண்டாடியிருந்தார். திருமண பந்தத்தின் காரணமாக குரும்பசிட்டியைப் புகுந்த வீடாக்கிக் கொண்டார். இலங்கையில் ஆசிரியராகவும், அருணோதயா கல்லூரியில் அதிபராகவும் கடமையாற்றியவர். உயர் கல்வியை தமிழ்நாட்டில் பெற்ற இவர், இலங்கை யில் நாடக கல்வி சார்ந்த டிப்புளோமா பட்டமும் பெற்றிருந்தார். 1988 ஆம் ஆண்டு முதல் கனடாவில் வாழ்ந்து வரும் இவர் நாடகம், கவிதை, சிறுகதை, சமயம் நிகழ்ச்சிகள் என்று எமது இனத்தின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்பணித்தவர்.

இவருக்கு கவிமணி, மதுரகவி, இலக்கியவித்தகர், திருவருட்கவி, சைவதுரந்தரர், சிவநெறிப்பாவலர் போன்ற பல பட்டங்களைச் சமூக நிறுவனங்கள் கொடுத்திருக்கின்றன. இன்று பல நிகழ்ச்சிகளில் தமிழில் இசைக்கப்படும் கனேடிய தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் இவர்தான் என்பது குறிப்பிடதக்கது.

எழுத்தாளர் இணையத் தலைவராக அவர் இருந்த போது, நான் செயலாளராக பணியாற்றினேன். சுமார் ஆறு வருடங்கள் அவர் தலைவராகப் பணியாற்றினார். எழுத்தாளர் இணையத்தின் சார்பில் ‘அரும்பு’ என்ற



சிறுகதைத் தொகுப்பையும் அப்போது தொகுத்து வெளியிட்டிருந்தார். அதன் பின் திரு சின்னையா சிவநேசன் தலைவராக இருந்த போது, செயலாளராக இருந்த நான் முதன் முதலாக மரபுக்கவிதை பட்டறை ஒன்றை ஏற்பாடு செய்திருந்தேன். கவிஞர் கந்தவனம் அவர்களும், பண்டிதர் அலெக்ஸாந்தர் அவர்களும் மரபு கவிதையைக் கற்பித்தார்கள். அதில் 12 பேர் பங்கு பற்றினார்கள். மறைந்த செல்லையா மஸ்டரும் அந்த வகுப்புகளில் பங்குபற்றியிருந்தார். தற்போது மரபுக் கவிஞர்களாக இருக்கும் நண்பர் சண்முகராஜா, இராஜலிங்கம், த.சிவபாலு, சகோதரி பவாணி தர்மகுலசிங்கம், அனலை இராசேந்திரம், பகீரதன் சகாதேவன் ஆகியோர் எங்களுடன் அப்போது மரபுக்கவிதை கற்றார்கள்.

ஆசிரியரின் நூல்களாக 110 ரூபாய் (1954), இலக்கிய உலகம் (1964), ஏன் இந்தப் பெருமூச்சு (1965), கூனியின் சாதனை (1966), கீரிமலையினிலே (1969), நுணாவிலூர் (1971), நல்லூர் நாற்பது (1971), பாடுமனமே (1972), உய்யும் வழி (1972), பரீட்சையில் சித்தியடைவது எப்படி? (1972) கவியரங்கில் கந்தவனம் (1972), இலங்கையில் ஆசிரியத்தொழில் (1977), விநாயகப்பா (1993), ஒன்றுபட்டால் (1994), மணிக்கவிகள் (1994), இயற்கைத்தமிழ் (1995), எழுத்தாளன் (1995), முத்தான தொண்டன் (1995), புதிய சைவ விநாவிடை (1997), தங்கம்மா நான்மணி மாலை (1997). பத்துப்பாட்டு (1998). ஆறுமுகம் (1998), ) சிவபுராணத் தத்துவம் (1998), கனடாவில் சைவசமயம் (2000), அது வேறு விதமான காதல் (2001), சிவ வழிபாடு (2001), புதிய சைவ வினாவிடை- 2 (2001), கந்தன் கதை (2002), ஓ கனடா (2002), வரிக்கவிகள் (2002), குருவழிபாடு (2002), விநாயகப் பெருமானும் அகத்தியரும் (2003), முருகப்பெருமானும் அவ்வையாரும் (2003), விநாயக வெண்பா (2004) விநாயக விருத்தம் (2004), பொங்கு தமிழ் (2005), கவிதை மரபு (2005), தென்னகத்தில் என்னகத்தார் (2007), பாவாரம் (2007) எனத் தொடர்ந்தது. கூடவே பல தொகுப்பு நூல்களின் வெளியீட்டிலும் இவர் அக்கறை காட்டி வந்தார்.

இவரது ஒரு நூலுக்கு நான் அணிந்துரையும் எழுதியிருக்கின்றேன். எழுத்தாளர் இணையத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்ட நிறைவின்போது சர்வதேச சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்தி நூலாக வெளியிட்டிருந்தோம். அதில் கவிஞர் கந்தவனம் அவர்களின் வாழ்த்துரையை, அவரைக் கௌரவிக்கும் வகையில் அவரது படத்துடன் பின் பக்க அட்டையில் பதிவு செய்திருந்தேன்.

கவிஞர் கந்தவனம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய, அவரது குடும்பத்தினருடன் இணைந்து நாங்களும் பிரார்த்திக்கின்றோம்.

---




**இ. கோகுலன்**
**குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:** வடக்கு - கிழக்கில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துவ தோடு, உள்ளூர் உற்பத்திகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புக்களை அதிகரிக்க அமெரிக்கா நடவடிக்கைகளை எடுத்து வருவதாக இலங்கைக்கான அமெரிக்க பிரதித் தூதுவர் டக்ளஸ் இ.சொனெக் தெரிவித்துள்ளாரே. இப்போதெல்லாம் நமது மக்களுக்கு என்ன தேவை என்று வெளிநாட்டு துாதுவர்கள் தான் சிந்திக்கிறார்கள். அது எதனால் என்று நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** இது என்ன கேள்வி. நமது மக்கள் பிரதிநிதிகள் மக்களின் பிரச்சினையை கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள் என்பது அவர்களுக்கும் தெரியாமலா இருக்கும்?. அதுதான் இப்போதெல்லாம் தூதுவர்கள் நமது பகுதிகளுக்கு வந்து மக்களோடு உறவாடத் தொடங்கியிருக்கின்றனர். இன்றைய பூகோள அரசியலில், தமக்கு விருப்பமானவற்றைச் செய்வதற்காக அரசாங்கங்களையோ அல்லது மக்கள் பிரதிநிதிகளையோ மாத்திரம் நம்பியிருக்காமல், மக்களையும் நம்பத் தொடங்கியிருக்கின்றனர் என்றுதான் நினைக்கிறேன். நமது மக்களும் இனி சிந்தித்து செயற்படவேண்டும்.

---

**ஜி. கிருசாந்தன், டிக்கோயா,**
**ஹட்டன்.**

**கேள்வி:** இலங்கையில் இராணுவத் தளங்களை உருவாக்குவதற்கு சீனா திட்டமிடுகின்றது என அமெரிக்காவின் புலனாய்வுப் பிரிவுகள் வெளியிட்டுள்ள தகவலை இலங்கை நிராகரித்துள்ளதுடன், இலங்கையின் எல்லைக்குள் தளங்களை அமைப்பது தொடர்பில் சீனா உட்பட எந்த நாட்டுடனும் பேச்சு இடம்பெறவில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** அமெரிக்க உளவுத்துறை சொல்வது சரியாகத்தான் இருக்கும் என்று நினைக்கின்றேன். அதே வேளை, இலங்கை அமைச்சர் சொல்வதும் சரியாகத் தான் இருக்கும். அவர் சொல்வது அப்படி தளங்களை அமைப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெறவில்லை என்றுதானே சொல்கிறார். அது உண்மையாக இருக்கலாம்தானே?. ஏனெனில் இலங்கையில் தளம் அமைக்கவேண்டுமானால் இலங்கையுடன் பேசித்தான் அமைக்கவேண்டுமா என்ன?. அம்பாந்தோட்டை துறைமுகத்திற்குள் என்ன நடக்கின்றது என்பது இலங்கைக்கு தெரியுமா என்ன? அது சரி, இதற்கு முன்னரும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் உளவுத்தகவல் ஒன்று கிடைத்தபோது இருந்ததுபோல இந்தத் தகவலையும் கண்டும் காணாமல் இருப்பார்களோ தெரியவில்லையே.

**எஸ். நிதர்சன், மிருசுவில், சாவகச்சேரி.**

**கேள்வி:** இது பொதுஜன பெரமுன கட்சியின் ஆட்சிதானா என்ற சந்தேகம் எமக்கும் உள்ளது. பசுவின் முன்பகுதி மட்டுமே எங்கள் வசம் உள்ளது. பின் பகுதி வேறு இடத்தில்தான் உள்ளது - என்று பொதுஜன பெரமுன கட் சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளாரே. அவர் சொல்வதன் அர்த்தம் உங்களுக்காவது புரிகின்றதா?

**வியுக்தியார்:** உங்களுக்காவது புரிகின்றதா என்று கேட்பதிலிருந்து உங்களுக்குப் புரியவில்லை என்பது தெரிகின்றது. பசுவின் முன்பகுதி மாத்திரமே தங்களிடம் இருப்பதாகவும், அதாவது தலைப்பகுதி மட்டுமே தங்களிடம் இருப்பதாகவும், ஆனால் பின்பகுதி ரணிலிடம் இருப்பதாகத்தான் கூறுகிறார் என்று நினைக்கின்றேன். தலையில்தான் உயிர் இருக்கின்றது ஆனால் பசுவின் பின் பகுதியில்தானே பால் இருக்கின்றது. அதாவது தங்களிடம் உயிர் இருந்தாலும் பாலைக்கறந்து எடுக்க முடியவில்லையே என்ற கவலை தான் அவருக்கு. அவருக்கு ஆட்சியில் இருப்பதை விட ‘பால் கறப்பது’ தானே முக்கியம்.

---

**வி. தர்மகுலசிங்கம், நவிண்டில், கரவெட்டி.**

**கேள்வி:** ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த புதிய கூட்டணியின் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார் என்றும், கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் மே தினக் கூட்டத்தில் இந்தப் புதிய கூட்டணி அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளாரே. அப்படி நடக்கும் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** அவர் இப்படி பல தடவைகள் சொல்லியிருக்கிறார் என்பதால் அதனை ஒரு பொருட்டாகவே நீங்கள் எடுத்திருக்க வேண்டியதில்லை. அவர் தன்னை இன்னமும் ஐக்கிய மக்கள் சக்தி என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிறார் என்று நினைக்கின்றேன். அவர் தன்னையும் மனுஷ நாயணக்காரவையும் சேர்த்துத்தான் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த கூட்டணி என்கிறாரோ தெரியவில்லையே?

---

**சு. சதீஸ்குமார், கொட்டடி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** வெடுக்குநாறிமலை பிரச்னை தொடர்பில் ஒன்று கூடி ஆராய முன்வருமாறு தமிழ்த் தேசியம் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வரலாற்றுத் துறை சார்ந்தோருக்கும் க. வி. விக்னேஸ்வரன் எம். பி. அழைப்பு விடுத்துள்ளாரே. இதுவரை நடந்த போராட்டங்களில் முன்னணியைத் தவிர வேறு எந்தக் கட்சியும் கலந்துகொண்டதாகத் தெரியவில்லையே ஏன்?

**வியுக்தியார்:** விக்கினேஸ்வரன் ஐயாவுக்கு அப்படியொரு பிரச்சினை இருக்கின்றது என்பதாவது தெரிந்திருக்கின்றதே என்று சந்தோசப்படுங்கள். அது சரி, இதுவரை நடந்த போராட்டங்களில் முன்னணி மட்டுமே கலந்துகொண்டதாக நீங்கள் கூறுவது எதனால் என்று தெரிகின்றது. ஆனால் நல்லூரில் நடந்த போராட்டத்தில் மற்றைய சில தலைவர்களும் கலந்துகொண்டார்களே. முன்னணியினர் மட்டும் கலந்துகொள்வதாக உங்களுக்கு தெரிவது, அவர்களோடு கலந்துகொள்ள மூன்று நான்கு பேராவது கூடவே செல்வதால்தான் என்று நினைக்கின்றேன்.

---

**எஸ். கார்த்திகேசு திருக்கோவில், அம்பாறை.**

**கேள்வி:** எமது ஆட்சியில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மீள்பரிசீலனை செய்யப் படும் என சுதந்திர மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** என்னையும் வடிவேலு ‘லெவலுக்கு’ கொண்டுவந்துவிடுவீர்கள் போல் இருக்கிறதே. ஒருவர் பகிடிவிட்டால் அதற்கெல்லாம் என்னிடம் கருத்துக் கேட்பது உங்களுக்கே நியாயமாக இருக்கின்றதா?. முதலில் அவர் அடுத்த தேர்தலில் வெற்றி பெற்று எம்.பி.யாக வேண்டும். அதற்கு பிறகல்லவா ஆட்சி அமைப்பதும் மற்றையவையும்.

# இந்தோனேசியா புதிய அதிபர் பிரபோவோ: கிழக்கு திமோரில் மனித உரிமை மீறிய ஜெனரல்!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**




1998 இல் இந்தோனேசிய இராணுவத்திலிருந்து முன்னாள் ஜெனரல் பிரபோவோ சுபியாண்டோ வெளியேற்றப்பட்டதன் பின்னர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் கூறி அமெரிக்கா, அவுஸ்திரேலியாவிற்குள் நுழைய தடைவிதிக்கப்பட்டார்.

சுஹார்டோ ஆட்சியின் இருண்ட நாட்களில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் இராணுவ ஜெனரல், நவீன கால ஜனநாயக வாக்கெடுப்பில் தற்போது பாரிய வெற்றி பெற்றுள்ளார்.

அவர் யாருமல்ல, இன்றைய இந்தோனேசிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரபோவோ சுபியாண்டோ, ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரலும் ஆவார். 2019 முதல் இந்தோனேசிய பாதுகாப்பு அமைச்சராக பணியாற்றிய பிரபோவோ சுபியாண்டோ மறைந்த ஜனாதிபதி சுஹார் ட்டோவின் இரண்டாவது மகள் டிட்டிக் சுஹார்டோவின் கணவனுமாவார்.

உலகின் மூன்றாவது மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தோனேசியாவில் கடந்த பெப்ரவரி 14, 2024 அன்று பொதுத் தேர்தல் நடைபெற்றது.

**மும்முனை போட்டி நிலவிய தேர்தல்**

இந்தோனேசியா மக்கள் தொகை கூடிய நாடுகளில் நான்காவது இடத்தில் உள்ளது. உலகில் மிக அதிகமான முஸ்லிம் மக்களைக் கொண்ட நாடாகும். இந்த நாட்டில் 275 மில்லியன் மக்கள்



வாழ்கின்றனர். இந்தோனேசியாவின் 17,000 தீவுகளில், சுமார் 205 மில்லியன் மக்கள் கடந்த அதிபர் தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர். இத்தேர்தலில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பிரபோவோ சுபியாண்டோ (Prabowo Subianto), முன்னாள் ஆளுநர்கள் அனிஸ் பஸ்வேடான் (Anies Baswedan), கன்ஜார் பிரனோவோ (Ganjar Pranowo) ஆகியோருக்கு இடையே மும்முனைப் போட்டி நிலவியது.

இறுதிக்கட்ட முடிவுகளின்படி, இந்தோனேசிய அதிபர் தேர்தலில் பிரபோவோ சுபியாண்டோ வெற்றி பெற்றார். இறுதிக் கட்ட வாக்கெடுப்பில் அவர் 59.77 விழுக்காட்டு வாக்குகளைப் பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைய அமைப்பு தெரிவித்தது.

தேர்தல் வெற்றியின் பின்னர், தலைநகர் ஜகார்த்தாவில் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் பேசிய பிரபோவோ, தனது வெற்றி அனைத்து இந்தோனேசியர்களின் வெற்றியாகும் என்றார்.

**போர் குற்றம் சாட்டப்பட்ட புதிய அதிபர்**

பத்து வாரங்கள் நீடித்த தேர்தல் பிரசார முடிவில் புதிய இந்தோனேசிய ஜனாதிபதி தேர்தலில் பாதுகாப்பு அமைச்சர் பிரபோவோ சுபியாண்டோ வெற்றியீட்டினார்.

அதிபராகத் தேர்வு செய்யப்பட்ட 72 வயதான முன்னாள் சிறப்புப் படை தளபதி சுபியாண்டோ சுமார் 59 வீதமான வாக்குகளை வென்றிருப்பதாக தேர்தல் முடிவுகள் காட்டின. அவரின் போட்டியாளர்களான அனீஸ் பெஸ்வடன் மற்றும் கன்ஜர் பிரனோவோ ஆகியோர் முறையே 25 மற்றும் 17 வீத வாக்குகளையே வென்றுள்ளனர்.

இதற்கு முன் இரு முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தோல்வியை சந்தித்த சுபியாண்டோ, நிகழ்கால அதிபர் திரு. ஜோக்கோ விடோடோவிடமிருந்து (Joko Widodo) பொறுப்புகளை ஏற்றுக்கொள்வார். பத்தாண்டுகள் அதிபராக இருந்த திரு. விடோடோ இம்முறை மீண்டும் போட்டியிடவில்லை. தேர்தலில் வெற்றி பெற்ற புதிய அதி பர், பிரபோவோ சுபியாண்டோ முன் னைய சுஹார்டோ ஆட்சிக்காலத்தில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர் குற்றங்கள் தொடர்பில் குற்றம்சாட் டப்பட்டவராவார்.

> **ஜகார்த்தாவில் பல மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும், கிழக்கு திமோரில் போர்க்குற்றம் சாட்டப்பட்டமையாலும் அமெரிக்கா, அவுஸ்திரேலியாவிற்குள் நுழைய தடை விதிக்கப்பட்டவரே தற்போது இந்தோனேசியா புதிய அதிபராக தேர்தலில் வென்றுள்ளார்**

சுஹார்டோ ஆட்சியின் இருண்ட நாட்களில் பல உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் இராணுவ ஜெனரல், தற்போதய வாக்கெடுப்பில் வெற்றி பெற்றுள்ளார். இந்தோனேசிய அரசியலில் ஒரு உயரடுக்கு குடும்பத்தில் பிறந்தவர்.

அவரது தந்தை பல வர்த்தகம் மற்றும் நிதியமைச்சர் பதவிகளை வகித்த புகழ் பெற்ற பொருளாதார நிபுணர் ஆவார். மேலும் அவரது தாத்தா நாட்டின் முதல் அரசுக்கு சொந்தமான வங்கியை உருவாக்கினார். அவரது குழந்தை பருவத்தில் அவரும் அவரது குடும்பத்தினரும் சுவிட்சர்லாந்து மற்றும் இங்கிலாந்தில் நாடுகடந்து வாழ்ந்தனர். அவரது தந்தை சுமத்ராவில் உள்ள பிரிவினை வாத குழுக்களுடன் தொடர்பு கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டார்.

கிழக்கு திமோரில் போர்க்குற்றம்:

1970 இல் இந்தோனேசியாவுக்குத் திரும்பி இராணுவத்தில் சேர்ந்தார். அங்கு அவர் விரைவாக பதவிகளில் உயர்ந்தார். 1980களில், கிழக்கு திமோரில் போராளிகளுக்கு எதிராக சிறப்புப் படைப் பிரிவுடன் பல தாக்குதல்களை மேற்கொண்டார். அவர் அங்கும் பப்புவாவிலும் இராணுவ அட்டூழியங்களைச் செய்ததாக பல சாட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. இந்தக் காலக்கட்டத்தில் அவர் முன்னாள் சர்வாதிகாரி சுஹார்டோவின் மகள்களில் ஒருவரான சிதி ஹெடியாடி ஹரியா டியை 1983 இல் மணந்தார். அவர்களின் திருமணம் 15 ஆண்டுகள் நீடித்தது.

பிரபோவோ சுபியாண்டோ ஜனநாயக ஆர்வலர்களின் கடத்தல்களுக்காக குற்றம் சாட்டப்பட்ட சிறப்புப் படைப் பிரிவின் தளபதியாக இருந்தார். அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டாலும், அவர் மீது எந்தவித குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படவில்லை. ஆயினும் காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் இன்னும் பதில் கேட்டு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அத்துடன் சுஹார்டோவின் குழப்பமான கடைசி நாட்களில், அவர் தலைநகர் ஜகார்த்தாவில் இனக் கலவரங்களைத் தூண்டி, சீன இன சிறுபான்மையினருக்கு கோபத்தை ஏற்படுத்தினார் என்றும் வரலாற்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். இதனை அவர் எப்போதும் மறுத்து வந்தார்.

**மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு**

1990 களின் பிற்பகுதியில் சுஹார்டோ ஆட்சியில் பல ஜனநாயக ஆர்வலர்களைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்த ஒரு பிரிவுக்கு அவர் கட்டளையிட்ட குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்டவரே இன்றைய அதிபராவார்.

ஜகார்த்தாவின் இருண்ட கடந்த காலத்தில் கடத்தப்பட்ட 23 பேரில், சிலர் உயிர் பிழைத்தனர், மற்றும் பலரை காணவில்லை. உள்ளூர் மற்றும் சர்வதேச உரிமைகள் பார்வையாளர்களின் கூற்றுப்படி, அதிர்ச்சியூட்டும் மனித உரிமை மீறல் பதிவைக் கொண்டுள்ள அவர், இராணுவ சர்வாதிகாரத்தின் கீழ் நாட்டின் கடந்த கால வரலாற்றில் பாரிய குற்றச்சாட்டுகளுக்கு முகங்கொடுக்காமல் நாட்டை விட்டு வெளியேறியவர் என்றும் கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து 1998இல் ராணுவத்தில் இருந்து நீக்கப்பட்ட அவர், 2000களில் ஜோர்டானில் சுயமாக நாடுகடத்தப்பட்டார்.

ஆனால் அவர் சில ஆண்டுகளுக்குப் பிறகு இந்தோனேசியாவுக்குத் திரும்பினார். அரசியலுக்கு மீள திரும்புவதற்கு முன்பு எண்ணெய் மற்றும் சுரங்கத்தில் தனது செல்வத்தை பெருமளவில் வளர்த்துக் கொண்டார்.

அவரது மனித உரிமை மீறல்களுக்காக அமெரிக்கா, அவுஸ்திரேலியாவிற்குள் நுழைய நீண்ட காலம் தடைவிதிக்கப்பட்டது. கடந்த சில வருடங்களில் தான் அந்த தடை நீக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ●





## ரணில்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிய செவ்வியொன்றில் எங்கள் ஆட்சிதான் நடக்கிறது. ஆனால் எங்க ளுக்கு அதனால் எந்தப் பயனுமில்லை என்பதை விளக்குவதற்கு "பசுமாடு எங்க ளதுதான். ஆனால் அதன் முன்பக்கமே எம்மிடமுள்ளது. பால்தரும் மடிப்பக்கம் எம்மிடமில்லை" என்று கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. அதேபோலவே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டுமென்ற அவர்களின் அழுத்தத் துக்கு ரணில் மசியவில்லை என்பது அண்மிய உதாரணம்.

இந்தவகையில் பொதுஜன பெரமுன வினரின் ஆதரவைத் தக்கவைக்கும் அதேநேரம் அவர்களின் தாளத்துக்கு ஆடும் பொம்மையாகவும் இல்லாமல் தன்னைத் தக்கவைப்பதற்கான தனித்துவமான ஒரு அணுகுமுறையை ரணில் பின்பற்றி வருவதாகவே தென்படுகிறது. பொதுஜன பெரமுனவுக்கும் ரணிலை விட்டால் இப்போதைக்கு வேறு நாதி யில்லை என்பதும் ரணிலுக்குத் தெரியும். நாடாளுமன்றத்தில் பொதுஜன பெர முனவினரால் காப்பாற்றப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல இன்று பிணை வழங்கப் படாது சிறையில் இருப்பது ரணிலின் அணுகுமுறைக்கு நல்ல எடுத்துக்காட்டு.

# இந்திய துணைத்தூதரக அனுசரணையில் கிளிநொச்சியில் சித்த மருத்துவ முகாம்

கிளிநொச்சி, மார்ச் 17

யாழ்.இந்திய துணைத் துதரகமும், வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த சித்த மருத்துவ முகாம் கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் நேற்றுக் காலை ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் யாழ் இந்திய துணைத் தூதரக உயரதிகாரி மனோஜ் குமார் கலந்து கொண்டார்.

குறித்த மருத்துவ முகாமில் பரிசோதிக்கப்பட்டு இலவசமாக மருந்துகள் வழங்கப்பட்டதுடன், பரிசோதனைகளும், ஆலோசனைகளும் இடம்பெற்றன.

யாழ் இந்திய துணைத் தூதரகம் 2022 ஆண்டு முதல் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அனைவருக்கும் சித்த மருத்துவம் என்ற கருப்பொருளில்




வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்துடன் இணைத்து வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சித்த மருத்துவ முகாம்களினை ஏற்பாடு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜனாதிபதித் தேர்தலை...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வுகாணப்படாமல் இருக்கும் நிலையில் வடக்கு,கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களின் இன்றைய நிலைப்பாட்டை தென்னிலங்கைக்கும் உலகிற்கும் கூறுவதற்கு ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்தவேண்டும் என்பதே தமிழப் பொது வேட்பாளர் யோசனையை நியாயப்படுத்துவதற்கு முன்வைக்கப்படும் வாதமாகும்.

இந்த யோசனையை தமிழ் மக்கள் மத்தியில் கொண்டுசெல்லும் முயற்சியை 'மக்கள் மனு" (People's Petition) என்ற சிவில் சமூக அமைப்பு முன்னெடுத்திருக்கிறது.

கடந்த வாரம் யாழ்நகரில் தந்தை செல்வா கலையரங்கில் 'ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வது எப்படி?" என்ற தலைப்பில் கருத்தரங்கொன்றை அந்த அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

இந்த விடயம் தொடர்பில் உரையாற்றுவதற்காக அழைக்கப்பட்டிருந்த அரசியல் அவதானிகள் மூவருக்கு புறம்பாக தமிழ்க்கட்சிகள் சிலவற்றின் தலைவர்களும் சபையோரில் சிலரும் தங்கள் கருத்துக்களை முன்வைத்தார்கள்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் இதுகாலவரையில் ஜனாதிபதி தேர்தல்களில் ஜனாதிபதி தேர்தல்களில் பெரும்பாலும் தென்னிலங்கை வேட்பாளர்களில் தங்களுக்கு விருப்பம் இல்லாதவரை தோல்வியடையச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடனேயே வாக்களித்து வந்திருக்கிறார்கள்.

போரின் முடிவுக்கு பிறகு 2010 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் போருக்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக அவரின் ஆணையை ஏற்று போரை முழுவீச்சில் முன்னெடுத்த முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கு தமிழ் மக்கள் அமோகமாக வழங்கிய ஆதரவு இந்த எதிர்மறை வாக்களிப்பு சிந்தனையின் ஆபத்தை மாத்திரமல்ல, அபத்தத்தையும் வெளிக்காட்டியது.

அதை அப்போது சில அரசியல் ஆய்வாளர்கள் போரில் சொல்லொணா உயிரிழப்புகளையும் அழிவுகளையும் சந்தித்த தமிழ் மக்களை வரலாறு மீண்டும் வஞ்சித்த ஒரு சந்தர்ப்பம் என்று வர்ணித்தது நினைவுக்கு வருகிறது.

இறுதியாக 2019 ஜனவரி ஜனாதிபதி தேர்தலில் போர்க்காலத்தில் பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கே தமிழ் மக்கள் அமோகமாக வாக்களித்தனர்.

கடந்த வாரம் கோட்டாபய வெளியிட்ட 'என்னை ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றிய சதி" என்ற நூலில் சிங்களவர்களின் குறிப்பாக சிங்கள பௌத்தர்களின் நலன்களுக்கும் சிங்களவர்களும் பௌத்தர்களும் அல்லாதவர்களின் நலன்களுக்கும் இடையிலான போட்டியின் விளைவாகவே தான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதாக கூறியிருந்தார். தனக்கு எதிராக வாக்களித்த சிறுபான்மைச் சமூகங்கள் மீது எந்தளவுக்கு அவர் வஞ்சினம் கொண்டிருக்கிறார் என்பதை இது பிரகாசமாக வெளிக்காட்டுகிறது.

இவ்வாறாக எதிர்மறையாக வாக்களிக்கும் போக்கை தமிழ்மக்கள் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் கைவிட்டு அதை வடக்கு, கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதி தங்களது நிலைப்பாட்டை உலகிற்கு கூறுவதற்கு வாக்குகளைப் பயன்படுத்தவேண்டும் என்பதே கருத்தரங்கில் ஆய்வாளர்கள் மூவரினதும் உரைகளின் சாராம்சமாக இருந்தது.

தமிழ்ப் பொதுவேட்பாளராக நிறுத்தப்படக்கூடியவர் தனக்கென்று அரசியல் அபிலாசை எதுவும் இல்லாதவராகவும் அதேவேளை தமிழ் மக்களின் மதிப்பைப் பெற்ற ஒரு முன்னணி பிரமுகராகவும் இருக்கவேண்டும் என்றும் தேர்தல் முடிவடைந்ததும் அவரின் தேவையும் முடிந்து விடவேண்டும் என்றும் கூட கூறப்பட்டது. அதாவது அவர் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை உலகிற்கு கூறுவதற்கு பயன்படுத்தப்படும் ஓர் அடையாளச் சின்னம் மாத்திரமே என்பதே அதன் அர்த்தம். அப்படியான ஒருவரை வடக்கு, கிழக்கு தமிழ்ச் சமூகத்தில் இன்று கண்டுபிடிக்கமுடியுமா என்பது முக்கியமான கேள்வி

தங்களது அரசியல் உரிமைப் போராட்டத்தின் அடுத்த கட்டத்தை எவ்வாறு முன்னெடுப்பது என்பதையோ அல்லது புதிய சூழ்நிலையில் தேசிய இனப்பிரச்சினைக்கு எத்தகைய அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதையோ தமிழ் மக்களால் சுயமாகத் தீர்மானிக்க முடியும் என்று எதிர்பார்த்தலாகாது. அதற்கு அவர்களுக்கு வழிகாட்டுவதற்கு சிந்தனைத் தெளிவுகொண்டதும் கடந்த கால அனுபவங்களில் இருந்து படிப்பினைகளைப் பெற்றதுமான தொலைநோக்குடைய அரசியல் தலைமைத்துவம் தேவை. அத்தகைய தலைமைத்துவம் இன்று தமிழ் மக்கள் மத்தியில் இல்லை.

இன்றைய தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு வழிகாட்டக்கூடியவர்களாக அன்றி மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய பிறழ்வான சிந்தனைகளின் பின்னால் இழுபட்டுச் சென்று தேர்தல்களில் வெற்றி பெறுவதை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு செயற்படுபவர்களாகவே இருக்கிறார்கள். எதிர்காலத்துக்கான ஒரு புதிய நோக்கை மக்களுக்கு காண்பிப்பதை விடுத்து அவர்களை கடந்த காலத்துடன் உணர்ச்சிபூர்வமாகப் பிணைத்துவைத்திருப்பதிலேயே இந்த தலைவர்கள் குறியாக இருக்கிறார்கள்.

இன்று தமிழ் அரசியல் சமுதாயம் பெருவாரியான அரசியல் கட்சிகளாகவும் குழுக்களாகவும் தமிழ் சிதறுண்டு கிடக்கிறது. அதேவேளை இன்றைய தமிழ்ச்சமுதாயம் குறிப்பாக வடக்கு சமுதாயம் கற்பனை செய்துபார்த்திருக்க முடியாத தியாகங்கள் நிறைந்த மூன்று தசாப்த கால விடுதலைப் போராட்டத்தைக் கடந்து வந்த ஒரு சமுதாயம் என்பதற்கான எந்த குணாதிசயத்தையும் கொண்டதாக இல்லை என்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் குறித்து சிந்திப்பதற்கு முதலில் தமிழ்க்கட்சிகள் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் உடனடிப் பிரச்சினைகளுக்கு தீர்வைக்காணும் வழிவகைகள் குறித்தும் தேசிய இனப் பிரச்சினைக்கு காணப்படவேண்டிய குறுகிய காலத் தீர்வு மற்றும் நீண்டகால அடிப்படையிலான நிரந்தர அரசியல் தீர்வு குறித்தும் தெளிவான ஒருமித்த நிலைப்பாடுகளுக்கு வரவேண்டும். இதைச் செய்வதற்கு வடக்கு, கிழக்கில் இன்று இயங்கும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களில் எத்தனை பேர் தங்களது கட்சி அரசியல் நலன்களை கைவிட்டு அர்ப்பணிப்புச் சிந்தையுடன் முன்வரத் தயாராயிருக்கிறார்கள்? பாராளுமன்ற அரசியல் இயல்பாகவே கொண்டுவருகிற சகல சீரழிவுப் போக்குகளின் செல்வாக்கு இவர்களை மாத்திரம் என்ன விட்டுவைத்தா இருக்கிறது?

'மக்கள் மனு" சிவில் சமூக அமைப்பு கடந்த நவம்பரில் இதே தந்தை செல்வா கலையரங்கில் தமிழ்க்கட்சிகள் மத்தியில் ஐக்கியத்தை வலியுறுத்தி ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது. பல தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் முன்வரிசையில் அமர்ந்திருந்து உரைகளைக் கேட்டார்கள். கரகோஷம் செய்துவிட்டு கருத்தரங்கு முடிந்து எழுந்து சென்ற அவர்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டியதன் அவசியத்தைப் பற்றி பிறகு தக்களுக்குள் பேசியதாக நாம் அறியவில்லை.

தமிழ் மக்களின் நிலைப்பாட்டை அறிய சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று சில தமிழ் அரசியல்வாதிகள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வந்திருக்கிறார்கள். புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தையும் உள்ளடக்கியதாக அந்த வாக்கெடுப்பு அமையவேண்டும் என்று கேட்டவர்களும் இருக்கிறார்கள். ஆனால், இலங்கை அரசாங்கங்களோ அல்லது சர்வதேச சமூகமோ அதை ஒருபோதும் பொருட்படுத்தியதில்லை.

இறுதியில் இலங்கை அரசாங்கம் நடத்தும் ஜனாதிபதி தேர்தலை வடக்கு, கிழக்கில் ஒரு சர்வஜனவாக்கெடுப்பாக பயன்படுத்துவது குறித்து தமிழர்கள் தாங்களாகவே தீர்மானிக்கவேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், தமிழ் மக்கள் அவ்வாறு வாக்களிப்பின் மூலம் வெளிப்படுத்தக் கூடிய நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் பொருட்படுத்தப்போவதில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், உலகிற்கு ஒரு செய்தியை கூறக் கூடியதாக இருக்கும் என்பது உண்மையே. அதற்கும் கூட தமிழ்க்கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டுடன் தமிழ் மக்களை வழிநடத்துவதற்கு முன்வர வேண்டும். தங்களது செயற்பாடுகளின் மூலமாக அந்த கட்சிகளின் தலைவர்கள் மக்களின் நம்பிக்கையை மீண்டும் வென்றெடுக்க வேண்டும். தமிழ்க்கட்சிகள் மீதான தமிழ்மக்களின் நம்பிக்கை இன்று இருப்பதைப் போன்று ஒருபோதும் தாழ்ந்த நிலையில் இருந்ததில்லை.

1977 ஜூலை பாராளுமன்ற தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி வடக்கு, கிழக்கு தமிழ்மக்களிடம் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆணையைக் கேட்டு 18 ஆசனங்களைக் கைப்பற்றி பாராளுமன்றத்துக்கு சென்றது. காலஞ்சென்ற அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவராகவும் பதவி வகித்தார். ஆனால், அந்த தேர்தலில் தனிநாட்டுக்கு தமிழ் மக்கள் தங்களுக்கு வழங்கியதாக கூட்டணியின் தலைவர்கள் கூறிக்கொண்ட ஆணைக்கு என்ன நடந்தது? அந்த அனுபவத்தை இன்றைய தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் நினைவு மீட்டிப்பார்க்க்க வேண்டியது அவசியமாகும்.

ஜனாதிபதி தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பாக கருதி தமிழ் மக்கள் தங்களது தற்போதைய நிலைப்பாட்டை வெளிப்படுத்தக்கூடியதாக அவர்களை எந்தளவுக்கு தமிழ்க்கட்சிகளினால் வழிநடத்த முடியும் என்பது அவற்றின் ஒருமித்த அணுகுமுறையிலேயே தங்கியிருக்கிறது. அத்துடன் அவ்வாறு தமிழ் மக்கள் வெளிப்படுத்தக்கூடிய நிலைப்பாட்டைத் தொடர்ந்து அடுத்த கட்டமாக எத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பதிலும் தமிழ்க் கட்சிகள் மத்தியில் முன்கூட்டிய தெளிவு இருக்கவேண்டும். அல்லாவிட்டால் இந்த முயற்சி ஒரு அரசியல் கேலிக்கூத்தாகவே முடியும். தமிழ் மக்களின் வாக்குகளும் பெறுமதியற்றவையாக போகும் என்பதுடன் அவர்களது நீண்டகால நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளும் கொச்சைப்படுத்தப் படுவதாகவே முடியும்.

## வெடுக்குநாறி....

ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்டர்களின் விடுதலையை வலியுறுத்தி நேற்றுக் காலை நல்லூர் ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட வாகனப் பேரணி வவுனியா பழைய பஸ் நிலையத்தை சென்றடைந்ததைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமானது.

கைது செய்யப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பேரணி வவுனியா பழைய பஸ் நிலையத்தில் ஆரம்பித்து அங்கிருந்து மணிக்கூட்டு கோபுரச் சந்தியை அடைந்து, பசார் வீதியூடாக சென்று ஹொரவப் பொத்தானை வீதியை அடைந்து அங்கு வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள தொல்பொருள் திணைக் களத்தை முற்றுகையிட்டது. அங்கு கோசம் எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரார்கள், பின்னர் கண்டி வீதி ஊடாக சென்று வவுனியா சிறைச்சாலை முன்றி லில் தமது போராட்டத்தை நிறைவு செய்தனர்.

ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டவர்கள் “ பொலிஸ் அராஜகம் ஒழிக, வெடுக்குநாறி எங்கள் சொத்து, கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய், வழிபாட்டு உரிமையை தடுக்காதே, சிவ வழிபாட்டை தடை செய்யாதே, வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம், இராணுவமே வெளியேறு, பொய் வழக்கு போடாதே, பௌத்தமயமாக்கலை உடனே நிறுத்து” என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்- சிவராத்திரி வழிபாட்டை குழப்பி பொலிசார் அராஜகத்தை கட்டவிழ்த்து கைது செய்யப்பட்டு பொய் குற்றச்சாட்டின் கீழ் சிறையில் இருக்கும் பூசகர் உள்ளிட்ட 8 பேரும் விடுவிக்கப்பட வேண்டும். அவர்களின் விடுதலைக்காக நாம் தொடர்ர்ந்தும் போராடுவோம்- என்றனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள், சமாதானத்திற்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தின் பணிப்பாளர் அருட்தந்தை ரமேஸ் அடிகள், கிறிஸ்தவ மத குருமார், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

## நல்லூரில்....

முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று வவுனியாவிலும் பெரும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே நல்லூரில் இருந்து வவுனியா நோக்கி வாகனப் பேரணி ஆரம்பமாகி வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக நிறைவடைந்தது.

பாதிக்கப்பட்ட மக்களின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இப் பேரணியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி க.சுகாஸ், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ)

## ஜனாதிபதியை....

இதனடிப்படையில் நாளை திங்கட்கிழமை ஜனாதிபதியை கொழும்பில் சந்தித்து பேசுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரனின் இல்லத்தில் இந்த சந்திப்பு நடந்தது.

இதில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரமச்சந்திரன், தமிழ் தேசிய கட்சியின் தலைவர் என்.சிறிகாந்தா, ஜனநாயகப் போராளிகள் அமைப்பின் தலைவர் வேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டுள்ள 8 தமிழர்களும் பிணையில் செல்ல முடியாதவாறு, தொல்லியல் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அவர்கள் தொடர்பான அடுத்த வழக்கு தவணை எதிர்வரும் செவ்வாய்க் கிழமையாகும். அதற்கு முன்னதாக நாளை கொழும்பில் ஜனாதிபதி ரணிலைச் சந்தித்து, கைதான தமிழர்கள் மீதான வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முன்னர் அவர்கள் மீதான குற்றப் பத்திரத்தில் மாற்றம் செய்து, உடனடியாக பிணை வழங்கும் ஏற்பாடுகளை செய்ய வலியுறுத்த தீர்மானிக்கப்பட் டுள்ளது.

அத்துடன், அடுத்த கட்டமாக வெடுக்குநாறி மலை விவகாரத்தில் நிரந்தரமான தீர்வை காண, ஜனாதிபதியுடன் அடுத்த கட்டமாக பேசவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய இந்த சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் எம்.பிக்கள் எவரும் பங்கேற்கவில்லை. (அ)

## கோட்டாபயவை....

தேரர், மிகப்பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ச நாட்டுக்கும் மக்களுக்கும் துரோகமிழைத்தார் என குறிப்பிட்டார்.

கோட்டபயவிடம் நிர்வாகத் திறமையிருக்கவில்லை. தனக்கு யாரால் நன்மை கிடைக்கும் எனக் கருதினாரோ அவர்களையே கோட்டாபய தன்னை சுற்றி வைத்திருந்தார் எனவும் அவர் கூறினார்.

கோட்டாபய தவறான பாதையில் செல்கின்றார் என நாங்கள் பல தடவை அவரிடம் தெரிவித்தோம். அதன் காரணமாகவே அவர் வீழ்ச்சியடைந்தார். நாங்கள் இன்று எதிர்கொள்ளும் நிலைமைக்கு அவரின் நிர்வாகத்திறன் இன்மையே காரணம் எனவும் ஆனந்த தேரர் குறிப்பிட்டார். (அ)

## வவுனியா....

5 பேர் கடந்த 5 நாட்களாக உண்ணா விரதப் போராட்டத்தை முன்னெடுத் திருந்தனர்.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோது ஆலய பூசகர் உள்ளிட்ட எட்டு பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தற்போது வவுனியா சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தம்மை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி 5 பேர் கடந்த ஐந்து நாட்களாக சிறைக்குள் உண்ணா விரதப் போராட்டத்தை முன்னெடுத் திருந்தனர்.

இவர்களின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு கிழக்கில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் நேற்று வவுனியாவில் இடம்பெற்ற பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி முடிவில் வவுனியா சிறைச் சாலைக்குச் சென்ற மதகுருக்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினர்.

அவர்களின் விடுதலைக்கு தாங்கள் பொறுப்பு என குறித்த குழுவினர் வழங்கிய வாக்குறுதியை அடுத்து கைதான வர்களில் 5 பேர் மேற்கொண்ட உண்ணா விரதப் போராட்டம் இடைநிறுத்தப் பட்டது. (அ)

## பொலிஸாரிடம்....

பேரில் 107 என்ற அவசர தொலை பேசி இலக்கம் தமிழ் மொழி மூல முறைப்பாட்டுக்காக அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது.

இதனை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்றது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் சமந்த விஜயசேகர தலைமையில் பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலய வாளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வில், வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட அரச அதிபர் க. கனகேஸ்வரன், வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், வடமாகாண சிரேஸ்ட பொலிஸ் மா அதிபர் மஹிந்த குணரட்ண உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள், விசேட அதிரடிப்படை அதிகாரிகள், வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், மதத் தலைவர்கள், கிராம அலுவர்கள், சமுதாய பொலிஸ் குழு உறுப்பினர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அதேபோன்று யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை இடம்பெற்ற இந்த அறிமுக நிகழ்வில் பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென் னக்கோன், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக ஆகியோர் பங்கேற்றனர். (அ)

## எமது ஆட்சியில்....

பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க நேற்று பகிரங்கமாக தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த மாநாடு நேற்றுக் காலை 10.30 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது வரலாற்றை எடுத்துக்கொண்டால், நாங்கள் திருமணம், சமய வழிபாடுகள், கலாசாரம் உள்ளிட்டவற்றில் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடன் செயற்பட்டோம். நாங்கள் ஒன்றாகவே வாழ்ந்தோம். எமக்குள் இனவாதம், வேறுபாடுகள் இருந்திருக்கவில்லை.

கடந்த காலத்தில் பிரிவினை அரசியலே மேற்கொள்ளப்பட்டது. தெற்கிலும், வடக்கிலும் அவ்வாறு பிரிவினை பேச்சுக்களை முன்னெடுத்தே அரசியல் செய்யப்பட்டது. அந்த அரசியல் நிலையிலிருந்து மாற்றத்தை உருவாக்க வேண்டும்.

இந்தியா எனும் நாட்டை நாங்கள் பார்க்கவேண்டும். இந்திய தேசியக் கொடியின் கீழ் அனைத்து மக்களும் ஒன்றாக வாழ்கின்றார்கள். இந்தியாவில் பல்வேறு மொழி பேசும் பல்வேறு இனங்கள் அதிகமாக வாழ்கின்றார்கள்.

அங்கு பல்வேறு வகையான கலை, கலாசாரம் என இருந்தாலும் அவர்கள் இந்தியர்களாக ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். அந்த ஒற்றுமையினால் அப்துல் கலாம் எனும் ஒருவரை ஜனாதிபதியாக கொண்டுவர முடிந்தது.

அந்த ஒற்றுமையால் சிறுபான்மை இனமான சீக்கிய இனத்தவர் ஒருவரை பிரதமராகவும் கொண்டுவர முடிந்தது. அந்த ஒற்றுமையானது ஒட்டுமொத்த இந்தியாவுக்கு வெற்றியை கொடுத்தது.

ஆனால், எமது நாட்டில் அதற்கு மாறாக நடந்தது. சுதந்திரம் கிடைக்கப் பெற்ற பின்னர் மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. மொழிப் பிரச்னை உருவாகியதை தொடர்ந்து இனப்பிரச்னையும் தொடங்கியது.

வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற மாநாட்டில் தனிநாடு கோரி சூரியனில் தேர்தலில் போட்டியிட்டனர். தற்கொலை குண்டுதாரிகள் உருவாக்கப்பட்டனர். தொடர்ந்து 2009 இல் யுத்தம் முடிந்தது.

நாங்கள் சுதந்திரத்துக்கு பின்னர் சண்டையிட்டே காலம் கடந்தது. அதனால் நாங்கள் எதனையும் பெற்றுக் கொள்ளவில்லை. இழப்புக்களையும், பகைகளையும், இன ரீதியில் தனிமைப் படுத்தப்பட்டவர்களாகவும் வாழ நேர்ந்தது. இவற்றுக்கு முடிவு வேண்டும் என்பதற்காகவே இந்த அரசியல் சூழல் எழுந்துள்ளது. அனைவரும் ஒன்றாகி அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்கவேண்டும்.

நடு நிலையான அரசியல்வாதிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளோம். அடுத்து வரும் நாட்களில் யாழ்ப்பாணத் திலும் தமிழ் அரசியல்வாதிகளுடன் பேச உள்ளோம். எமது அரசாங்கள் உருவாக்கப்பட்ட சில நாட்களிலேயே பல்வேறு தீர்வுகளை நாங்கள் வழங்கு வோம் - என்றார். (அ)

## யாழ்ப்பாணம்....

பெடுத்தாடிய கொழும்பு இந்து கல்லூரி 80 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ். இந்து கல்லூரி 4 விக்கெட்களை இழந்து 150 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பித்த வேளை யாழ். இந்துக் கல்லூரியின் பிரிமிகன், தரணீசன் தொடர்ந்து துடுப்படுத்தாடினர்.

தரணீசன் 13 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்த நிலையில் அடுத்து வந்த சுபர்ணன் அதிரடியாக ஆடினார். இந்நிலையில், பிரீமிகன் 43 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார்.

சுபர்ணன் 4 பௌண்ட்ரிகளுடன் 26 பந்துகளில் 31 ஓட்டங்களை பெற்றார். பின்னர் வந்த கஜன் 15 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். 56 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 240 ஓட்டங்களை பெற்ற யாழ். இந்து கல்லூரி ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

சாருஜன் 28 ஓட்டங்களுடனும் பரத்துவாசன் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டம் இழக்காது இருந்தனர்.

கொழும்பு இந்துக் கல்லூரியின் பந்துவீச்சில் நிதுசன், அபிஷேக், யாதவ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்களையும் யதுசன், தேஸ்கர் ஒவ்வொரு விக்கெட்களையும் கைப்பற்றினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த கொழும்பு இந்து கல்லூரி சுபர்ணன், தரணீசன் ஆகியோரின் பந்து வீச்சை தாக்குபிடிக்க முடியாது மளமள வென்று விக்கெட்களை இழந்தது.

32 ஓவர்களே தாக்குப்பிடித்த கொழும்பு இந்து கல்லூரி 60 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதில் ஏழாவது வீரராக இறங்கிய டிலோஜன் மட்டுமே 28 ஓட்டங்களை பெற்றார். 5 வீரர்கள் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டம் இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். இந்து கல்லூரியின் பந்து வீச்சில் சுபர்ணன், தரணீசன் தலா 4 விக்கெட்களையும் ஹரிகரன் இரண்டு விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இறுதியில் இன்னிங்ஸ் மற்றும் 100 ஓட்டங்களால் யாழ். இந்து கல்லூரி வெற்றியை தனதாக்கியது.

ஆட்டநாயகன்: சு.சுபர்ணன் (31 ஓட்டங்கள், 7 விக்கெட்டுகள் - யாழ். இந்துக் கல்லூரி)

சிறந்த துடுப்பாட்ட வீரர் : கி.பரிஷித் (46 ஓட்டங்கள் யாழ். இந்துக் கல்லூரி)

சிறந்த பந்துவீச்சாளர்: கு.தரணீசன் (5 விக்கெட்கள் - யாழ். இந்துக் கல்லூரி)

சிறந்த களத்தடுப்பாளர்: ரீ. பிரேமிகன் (யாழ். இந்துக் கல்லூரி) (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கையில் இருந்து வெளியேறும் தாதியர்

## 400 இற்கும் மேற்பட்டோர் சிங்கப்பூரில் நெருக்கடி நிலையில் சுகாதாரத்துறை

கொழும்பு, மார்ச் 17

**இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.**

அதுவும் மருத்துவத்துறையை பொறுத்தவரை கணிசமான வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று தொழில் புரிவதனை அவதானிக்க முடிகிறது.

இந்த நிலையில், 400 இற்கும் மேற்பட்ட இலங்கை தாதியர்கள் சிங்கப்பூரில் பணி புரிவதாக சிங்கப்பூரில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 100 தாதியர்களைக் கொண்ட குழுவொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிங்கப்பூரில் உள்ள சங்கி விமான நிலையத்தை சென்றடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிங்கப்பூரின் சுகாதார அமைச்சின் தொடர்ச்சியான ஒத்துழைப்பின் கீழ் ஒரே நேரத்தில் சிங்கப்பூருக்கு அனுப்பிவைக்கப்படும் பாரியளவிலான தாதியர்களைக் கொண்ட குழு இதுவாகும்.

தற்போதைய நிலையில், இலங்கையைச் சேர்ந்த தாதியர்கள் இரண்டு வருட காலத்துக்கு சிங்கப்பூரின் சுகாதாரத்துறையில் பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தாதியர்களுக்கு சிங்கப்பூர் அரசாங்கம் இரு வழி விமான பயணச் சீட்டுகள், தங்குமிட வசதி என்பவற்றை இலவசமாக வழங்கியுள்ளது. அத்துடன், சம்பளத்திற்கு மேலதிகமாக ஒவ்வொரு நபருக்கும் 1,000 சிங்கப்பூர் டொலர் இடமாற்றக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க கடந்த இரண்டு வருடங்களில் இலங்கையில் இருந்து 2,528 தாதியர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் அண்மையில் தெரிவித்திருந்தது.

அத்துடன், இந்த வெளியேற்றம் காரணமாக சுகாதாரத்துறையில் கடுமையான நெருக்கடி உருவாகும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# இலத்திரனியல் பொறியிலாளர்கள் 159 பேர் நாட்டிலிருந்து வெளியேற்றம்

கொழும்பு, மார்ச் 17

2022 ஆம் ஆண்டிலிருந்து இது வரையான காலப்பகுதியில் 159 இலத்திரனியல் பொறியிலாளர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலத்திரனியல் பொறியிலாளர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் 104 இலத்திரனியல் பொறியிலாளர்கள் சேவையிலிருந்து விலகி வெளிநாடு சென்றுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் தனுஷ்க பராக்கிரம தெரிவித்துள்ளார். (அ)

# மருதங்கேணி மீனவரை காணவில்லை



வடமராட்சி, மார்ச் 17

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியை சேர்ந்த கடற்றொழிலாளர் ஒருவர் நேற்று அதிகாலை கடலில் தொழிலுக்கு சென்ற நிலையில் கரை திரும்பாமல் காணாமல் போயுள்ளார். அவர் சென்ற தெப்பம் மட்டும் கரையொதுங்கி உள்ளது.

காணமல்போனவர் மருதங்கேணி வடக்கைச் சேர்ந்த முத்துச்சாமி தவராசா (வயது-60) என்பவரே காணாமல் போயுள்ளார். காணமல் போனவரை தேடும் பணியில் மீனவர்களும் கடற்படையினரும் ஈடுபட்டுள்ளனர். (அ-2)

# அநுரகுமாரவுக்கு கிளிநொச்சியில் தமிழரசுவின் உறுப்பினர் எதிர்ப்பு




கிளிநொச்சி, மார்ச் 17

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்கவின் கிளிநொச்சி வருகைக்கு நேற்று எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

மக்கள் சந்திப்புக்காக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நேற்று கிளிநொச்சி சென்றிருந்த நிலையில் இவ்வாறு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினருமான சண்முகம் ஜீவராஜ் இவ்வாறு எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

மக்கள் சந்திப்பு இடம்பெற்ற பகுதியை அண்மித்து ஏ-9 வீதியில் "இணைந்த வடக்கு கிழக்கை நீதிமன்றம் வரை சென்று பிரித்த பெருமை ஜே.வி.பியை சாரும், சொந்த இனத்தையே அழித்த ஜே.வி.பி எங்கள் இனத்திற்கு எவ்வாறு தீர்வு தரும்" என எழுதப்பட்ட பதாதைகளை கட்டி எதிர்ப்பில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# 24 மணித்தியாலங்களில் 1,067 பேர் நாட்டில் கைது!

கொழும்பு, மார்ச் 17

நேற்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 1067 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் போதைப்பொருட்கள் தொடர்பில் 984 பேர் கைது செய்யப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு மற்றும் விசேட செயலணியின் ஆவணங்களில் பெயரிடப்பட்டுள்ள 50 சந்தேகநபர்களும் சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், குற்றப்பிரிவின் பட்டியலில் உள்ள 83 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சுற்றிவளைப்புகளில் ஹெரோயின், ஐஸ், கஞ்சா மற்றும் மாவா உள்ளிட்ட போதைப்பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (அ)

# கூட்டணியின் தலைவராக அருண் தம்பிமுத்து

வவுனியா, மார்ச் 17

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக அருண் தம்பிமுத்து தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபைக் கூட்டம் நேற்று அதன் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி தலைமையில் வவுனியாவில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கூட்டணியின் தலைவராக அருண் தம்பிமுத்து தெரிவாகினார். (அ)

# பெரமுனவுக்கு எதிராக பல்வேறு சதி முயற்சிகள்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 17

பொதுஜன பெரமுனவுக்கு எதிராக நாட்டில் பல சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் சொத்துக்களையும் வளங்களையும் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற செயற்பாட்டை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். இதனை எம்மால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இது தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் எதிர்ப்போம்.

இதுவே எமது கட்சியின் நிலைப்பாடு. இலங்கையின் வளங்கள் எதிர்காலத்துக்காக பாதுகாக்கப்படவேண்டும்.

அதேவேளை பொதுஜன பெரமுன ஒரு வீழ்ச்சியடைந்த கட்சி என பலர் பொய்யான கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

எமது கட்சியை தோல்வியடைந்த கட்சியாக வெளிக்காட்ட பல சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

காலிமுகத்திடல் போராட்டத்தின்போது எமது கட்சி உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்பட்டார். எமது கட்சி உறுப்பினர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

எனினும், ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்ய எமக்கு அதிகாரம் இருந்தது - என்றார். (அ)

# எட்கா உடன்படிக்கை மிகவும் ஆபத்தானது!

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 17

எட்கா உடன்படிக்கை எமது நாட்டுக்கு ஆபத்தையே விளைவிக்கும். எனவே, அவ்வுடன்படிக்கை கைச்சாத்திடப்படுவது எப்படியாவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார தெரிவித்தார்.

அத்துடன், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவானது படையினரைக் காட்டிக்கொடுக்கும் செயலாகும். ஆகவே, எட்கா மற்றும் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவுக்கு எதிராக மொட்டு கட்சி எம்.பிக்கள் அணி திரள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எட்கா உடன்படிக்கை தொடர்பான பேச்சு கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. ஏப்ரல் மாதமளவில் குறித்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதை கைச்சாத்திட்ட பிறகு அதில் உள்ள எதையும் மாற்ற முடியாத நிலை ஏற்படும். அவ்வாறே உடன்படிக்கை உள்ளது.

எட்கா உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவது நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லையேல் இலங்கை இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக மாறிவிடும். அத்துடன், நின்றுவிடாமல் ஈழம் உருவாக்கப்படலாம்.

ஆசியாவின் நேட்டோ அமைப்பாகத்தான் குவாட் அமைப்பு காணப்படுகின்றது. எனவே, ஈழம் என்பது இஸ்ரேல்போல் செயற்படும். காசாவில் ஏற்பட்டுள்ள நிலைமையே சிங்கள மக்களுக்கு ஏற்படக்கூடும்.

தற்போதைய சூழ்நிலை எமது தலைவிதியை தீர்மானிக்கப்போகின்ற தருணமாகும். எனவே, எட்கா உடன்படிக்கைக்கு இடமளிக்கக்கூடாது. மகிந்த, கோட்டாபய போன்றவர்கள் இது தொடர்பில் மௌனம் காக்கின்றனர். போர் வெற்றிக்கு உரித்துடையவர்கள் இந்த காட்டிக்கொடுப்பில் ஈடுபடக்கூடாது.

உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை நிறுவுவது தொடர்பான சட்டமூலமும் ஆபத்தானது. எனவே, இவை தடுக்கப்பட வேண்டும். மொட்டு கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கிளர்ந்தெழுந்து ஜனாதிபதிக்கு தமது நிலைப்பாட்டை அறிவித்து அழுத்தம் கொடுக்க வேண்டும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# உதைபந்தாட்ட வெற்றியாளர்கள் 2024 வவுனியா - வட மாகாணம்

மைலோ உதைப்பந்தாட்ட வெற்றியாளர்கள் 2024 - வட மாகாணத்தின் மூன்றாவது கட்டம் (10 மற்றும் 12 வயதிற்குட்பட்டவர்களுக்கான), 2024 மார்ச் 9 அன்று வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்றது. மொத்தமாக 32 அணிகள் இப்போட்டியில் பங்குபற்றியிருந்ததுடன், அவற்றுள் பெண்கள் அணி 07 உம் ஆண்கள் அணி 25 உம் அடங்கியிருந்தன.

இவ்வார இறுதி வெற்றியாளர்களாக, வவுனியா மாவட்டத்திலிருந்து பின்வரும் பாடசாலை அணிகள் வலம்வந்தன:

- வவுனியா - நெலுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் (10 வயதிற்குட்பட்ட பெண்கள்)
- வவுனியா- விபுலானந்தா கல்லூரி (10 வயதிற்குட்பட்ட ஆண்கள்)
- வவுனியா- சைவப்பிரகாச மகளிர் கல்லூரி (12 வயதிற்குட்பட்ட பெண்கள்)
- வவுனியா- வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் (12 வயதிற்குட்பட்ட ஆண்கள்)

2024 மார்ச் 23 அன்று யாழ்ப்பாணத்திலுள்ள துரையப்பா அரங்கத்தில் இடம்பெறவுள்ள, மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற இறுதிச் சுற்றில் போட்டியிட இவ்வார இறுதி நிகழ்விலிருந்து பின்வரும் பாடசாலைகள் தகுதி பெற்றுள்ளன.

**10 வயதிற்குட்பட்ட பெண்கள்**

- வவுனியா - நெலுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்

10 வயதிற்குட்பட்ட ஆண்கள்

- வவுனியா- விபுலானந்தா கல்லூரி
- வவுனியா- நெலுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்
- வவுனியா - முஸ்லிம் மகா வித்தியாலயம்
- வவுனியா-மூன்று முறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

12 வயதிற்குட்பட்ட பெண்கள்

- வவுனியா - சைவப்பிரகாச மகளிர் கல்லூரி
- வவுனியா - முதலியார்குளம் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
- வவுனியா- விநாயகர் வித்தியாலயம்
- வவுனியா- மூன்றுமுறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

**12 வயதிற்குட்பட்ட ஆண்கள்**

- வவுனியா - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்
- வவுனியா - முதலியார்குளம் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
- வவுனியா - அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலயம்
- வவுனியா - நெலுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்

எதிர்கால உதைப்பந்தாட்ட நட்சத்திரங்களாக மாறும் திறமைகளைக் கொண்டவர்களுக்கு களம் அமைத்து, வட மாகாணத்தில் அபிலாஷைமிக்க விளையாட்டு வீரர்களின் விளையாட்டுத் திறன்களை தூண்டுவதே மைலோ உதைப்பந்தாட்ட வெற்றியாளர்கள் நிகழ்வின் நோக்கமாகும். இச்சுற்றுப் போட்டியுடன் இணைந்ததாக, திறமைமிக்க வீரர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு குழு, இலங்கை பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சங்கத்தின் அனுபவம்மிக்க பயிற்றுவிப்பாளர்களின் வழிகாட்டலில் எதிர்வரும் மாதங்களில் வாரஇறுதியில் விசேட பயிற்சிகளையும் பெற்றுக்கொள்ளவுள்ளனர். கல்வி அமைச்சு, வட மாகாண கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் ஆதரவுடனும், நெஸ்லே மைலோவின் அனுசரணையுடனும் இந்நிகழ்விற்கான ஏற்பாட்டை இலங்கை பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சங்கம் நிர்வகிக்கும்.

இலங்கையில் அடிமட்ட விளையாட்டுக்களை வளர்ப்பதிலும், விளையாட்டில் பாலின பன்மைத்துவத்தை முன்னின்று வழிநடத்திச் செல்லவும் நெஸ்லே மைலோவின் பயணத்தில், இலங்கையில் எதிர்காலத் தலைமுறைகளை வளப்படுத்தும் நோக்குடன் இந்நிகழ்வுக்கு அனுசரணையளிக்கின்றது.


Nelukkulam Kalaimagal Maha Vidyalaya Under 10 Girls


Vavuniya Tamil Madhya Maha Vidyalaya Under 12 Boys


Vavuniya boys' teams in action at MILO Football Champs 2024


Saivapragasa Ladies College Under 12 Girls


Vipulanantha College Under 10 Boys


Vavuniya girls' teams in action at MILO Football Champs 2024


A competitive game at Vavuniya MILO Football Champs


Teams going head to head at the Vavuniya District Game of MILO Football Champs 2024